241

# DRAWING AND CHILDREN.

## சித்திரமும் சிறுவர்களும்.

BY


**T. S. Balasundaram Pillai,**

Drawing Master,

**Government College, Coimbatore.**

15 JUL 1926

How you are seven?
Look sharp!




இதில் எவ்விதம் ஏழு இருக்கிறதுகள்?
கவனித்துப்பார்க்க!

கோயமுத்தூர் அரசாங்க கலாசாலை

சித்திர ஆசிரியர்

டி. எஸ். பாலசுந்தரம் பிள்ளையவர்கள்

எழுதியது.

Cop... 926

[PRICE AS. 4½.

Pr... Krishna Vilasa Press, Coimbatore.

NP.
N26.
224679

# MOTTOS.

1. Drawing is the only universal language.

2. Drawing enables one to say what could not otherwise be said.

3. Drawing enables one to see what could not otherwise be seen.

4. Drawing is a language, an intelligible mode of communicating thoughts.

5. A knowledge of Drawing is a most efficient means of developing the powers of the mind.

6. Drawing gives a power to the eye and to the mind different from that gained by any other discipline.

7. Drawing is the most valuable discipline for the mind in early education.

8. Drawing encourages a habit of accuracy, order and neatness, and gives a taste for innocent and intellectual amusment.

9. It is the love and appreciation of what is truly beautiful in Nature that makes the great Artist.

10. Drawing is a power of expressing forms accurately, and in daily life is far more valuable than words.

11. Drawing gives children a better use of their hands and eyes, and trains them to observe in a way they never did before.

12, A Room without pictures
is like
A House without windows.

# OPINIONS.

# அபிப்பிராயங்கள்.

B 15 JUL 19
NP N26

**C. K. Subramaniya Mudaliar, B.A.,**
Member of the Senate &
of the Council of Affiliated Colleges,
University of Madras.

**Coimbatore,**
**6-1-26.**

"சித்திரமும் சிறுவர்களும்" என்ற இப்புத்தகத்தை எனது நண்பர் திருவாளர் T. S. பாலசுந்திரம்பிள்ளை அவர்கள் கொடுக்கப்பெற்று வாசித்து மிக மகிழ்ச்சியடைந்தேன். அது எளிய நடையில் சிறுவர் சிறுமிகளுக்கு உபயோகமாகக் கூடியபடி எழுதப் பெற்றிருக்கிறது. சித்திரம் வரைதலாகிய வித்தையின் அவசியத்தைப் பற்றி யாவரும் அறிந்துகைக்கொள்ளுமாறு இது எழுதப் பெற்றிருத்தல் காண மிகவும் வியப்பைத் தருகின்றது. மாணவர் சம்பாஷணை முறையில் எழுதப் பெற்றிருத்தலால் இதை வாசிக்கத் துவக்கினால் ஆதி முதல் அந்தம் வரை படித்து முடித்தே கீழேவைக்கும்படி ஊக்கமளிக்குமாறு அமைக்கப் பெற்றுள்ளது கணத்தக்கதாம். இகபர சாதகங்களைத்தரும் உலக வாழ்க்கையும் மனிதருடைய பல வேறு வகைப்பட்ட முயற்சிகளும் வெவ்வேறு சக்திகளை ஆதாரமாகக் கொண்டு உலகம் நடைபெறுகின்றதாக வெவ்வேறு திறத்தினர்கள் எண்ணுவர். உலகமானது சூரியன் என்னும் கிரகத்தின் இழுப்புச் சக்தியினால் இழுக்கப் பெற்றுத் தன்னிலையில் நின்று சுழன்று வருகின்ற [illegible]பர் வான நூலோர். இவ்வாறு பலரும் பலப்பல கொள்கைகளை நாட்டுவர். ஆனால் நமது ஆசிரியர் திருவாளர் பாலசுந்திரம்பிள்ளை அவர்கள் உலகம் நடைபெறுவதற்குச் சித்திரமே துணைக்காரணம் என்று நாட்டுவர். சித்திரமின்றி அரசாங்கம் நடவாதாம், கைத்தொழில் இயலாதாம், வியாபாரம் மேவாதாம். ஏன்? பலபடச் சொல்வானேன்? எல்லாம் வல்ல கடவுளைத் தியானித்து மக்கள் நற்கதியடைதற்கும் சித்திரமே சாதனமாகுமென்று ஆசிரியர் இச்சிறு கட்டுரையிலே நிரூபிப்பரானால் சித்திரத்தின் அவசியத்தைப்பற்றி இனியும் வேறென்ன சொல்லவேண்டும்? பள்ளிக்கூடங்களில் இதனை மாணவர் வாசிக்

கச் செய்து சித்திரம் வரைதலைக் கட்டாய பாடமாக யாவரும் ஊக்கத்துடன் கற்றுவரவேண்டுமென்பதே ஆசிரியரின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறி நன்மை பயப்பதாக.

(Sd.) C. K. Subramaniyam.

---

**T. R. Rajarathinam Pillai, B.A., L.T.,**
Deputy Inspector of Schools.

**Omalaur,**
**4-5-26.**

அன்பு மிக்க நண்ப!

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய "சித்திரமும் சிறுவர்களும்" என்னும் அரிய நூலை கண்ணுற்று மகிழ்ந்தனன்.

தெய்வக்கொள்கையாலும், ஞான மேம்பாட்டாலும் விளங்கிய நந்தேய சான்றோர்கள் புகழ்ந்துகொண்டாடிவந்த பண்டைக் கால ஓவியச்சிறப்பையும், அஃது அவ்வாறு நனி உச்ச நிலையில் அடைந்திருத்தலினாலே, நந்தேயம் எவ்வளவு சீரிய நிலையில் விளங்கியிருந்ததென்பதும் இதனைக்கண்ணுறும் ஒவ்வொருவரும் நன்கு பாராட்டி மனமகிழ்வார்கள் என்பதில் ஐயமின்று. அறுபத்துநான்கு கலைஞானங்களில் ஒன்றாகிய ஓவியப்பயிற்சி தற்காலத்தில் குன்றிய நிலையில் இருத்தலால், இச்சிறு புத்தகம் போன்ற பல புத்தகங்கள் சிறுவர்சிறுமிகளுக்கு மட்டுமல்லாமல், முதியோர்களுக்கும் ஆனந்தம் ஊட்டுமா[illegible]யில் எளிய செந்தமிழ் நடையில் வெளிவரவேண்டுமென [illegible]ரும்புகின்றவர்களில் யானும் ஒருவன். இதில் விளக்கப்பட்ட பொருள்கள்—கடவுளிடத்தன்பு, பக்தி, உற்றுநோக்கியறியும் ஊக்க[illegible] மனோலயம், பாஷையின்வரிவடிவின் அமைப்பு, முதலாகி[illegible]ங்களை வளர்த்து பாதுகாத்துப் படிப்போர் மனதில் பதியச்செய்யும் என்பதாக அபிப்பிராயப்படுகின்றேன்.

இப்புத்தகம் மேனாட்டு கீழ்நாட்டு ஓவியக்கலைகளை ஆராயப்புகும் இளம்பக்குவிகளாகிய மாணவர்களுக்கும், சித்திரத்தின் சிறப்பையும் அதனை சுலபமான வழியில் கற்பிக்கும் முறையையும் உணராத ஆரம்ப ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படுமென்றும் எண்ணுகின்றேன். ஆதலின் இதனைக் கல்விச்சாலைகளில் பயில்கின்ற மாணவமாணவிகளுக்கும் 4, 5 வகுப்புகளில் பயிலும் சிறுவர், சிறுமிகளுக்கும் உப பாட புத்தகமாக வைத்து

c✓

நடத்தினால், சித்திரச் சிறப்பை உணர்வதற்கும், தமிழ் பாஷை அபிவிர்த்திக்கும் பெரிதும் சாதனமாகும் என்று கருதுகின்றேன்.

தாங்கள் சித்திரச் சீர்மையைப்பற்றி தொகுத்தும், விரித்தும், சுருக்கக்கூறி விளங்கவைத்தல் என்னும் அழகினைப் பொருத்தியும் உரையாடல் (conversation) முறையில் தீட்டி வெளியிட்டதைக்குறித்து தமிழ் உலகம் நனி மகிழும் என்பது திண்ணம். பண்டைக்காலத்தில் போற்றப்பட்டு தற்காலத்தில் விளக்கங்குன்றி கிடக்கின்ற இது போன்ற பல புத்தகங்களை மாணவதமிழுலகத்திற்கு பயன்படுமாறு எழுதி வெளியிட எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு ஊக்கமும், பொருளும், உதவி அருள் பாலிப்பாராக.

தங்களன்பன்,

(Sd) T. R. Rajarathinam.

---

அ. கந்தசாமி பிள்ளை,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
கவர்ன்மெண்டு காலேஜ்.

கோயமுத்தூர்,
5-5-26.

"சித்திரமும் சிறுவர்களும்" என்கிற இவ்வரிய நூலைக் கண்ணுற்று அகமகிழ்ந்[illegible] இந் நூலாசிரியர் திருவாளர் T. S. பாலசுந்தரம்பிள்ளை [illegible]கள், 1914ம் ஆண்டில் சென்னையில் நடந்த ஓவியப்புலமை கண்காட்சியில் (Fine Arts Exhibition) முதல்த[illegible]சும், 1916-ம் ஆண்டில் சென்னை கவர்னர் லார்ட் பென்ல[illegible] துரை அவர்கள் ஆதரவில் திருச்சியில் நடந்த கண்காட்சியில் மலைப்புப்படம், வர்ண சித்திரங்கள், முதலியவைகளுக்கு முதல்தர யோக்கியதா பத்திரங்கள் இரண்டும், 1917-ம் ஆண்டில் தஞ்சையில் நடந்த கண்காட்சியில் முதல்தர யோக்கியதா பத்திரம் ஒன்றும், மேற்படி தஞ்சை கண்காட்சியில் (Photography) ஒளிப்படத் தேர்ச்சிக்கு ஓர் யோக்கியதா பத்திரமும், 1924-ம் ஆண்டில் நாகூர் திராவிட சங்கத்தாரால் நடத்திய ஆசாரச்சீர்திருத்த வியாசப்போட்டியில் முதல்தர தங்க பதக்கமும் பெற்றிருக்கிறார். தவிரவும் கோயமுத்தூர் பழைய மாணவர் சங்க நாடகமேடை திரையலங்கார முழுமையும் இவருடைய

ஓவியப் புலமையை நன்கு புலப்படுத்தும். அதற்காக மேற்படி காலேஜ் பிரின்ஸ்பாலாகவிருந்த திருவாளர் K. S. வைத்தினாத அய்யர் அவர்கள் M.A. L.T., 1922ம் ஆண்டில் கொடுத்திருக்கும் நற்சாட்சி பத்திரம் ஒன்றே போதும். இதனால் இவரை சித்திர ஆசிரியர் என்றழைக்காமல் சித்திர நிபுணர் (Artist) என்றழைப்பதே பொருந்துமென்பது எனது அபிப்பிராயம்.

மேற்கூறிய உண்மைகளால் இவர் இச்சிறிய நூலில் எவ்வளவு அரிய பெரிய ஓவியக்கருத்துகளை சுருங்கக்கூறி விளங்க வைத்திருப்பாரென்பதை வாசகர்களே உணர்வார்கள். இவருக்கு எல்லா நலன்களும் உண்டாக எனது வழிபடு கடவுளை மனமொழி மெய்களாற் போற்றுகிறேன்.

இங்ஙனம்,

(Sd) அ. கந்தசாமி.

---

T. V. Umamahesvaran Pillai, B.A., B.L.,
President,
Karanthai Tamil Sangam, Tanjore.

Karanthattankudi,
6-5-26.

அன்பரீர்,

நலம், தங்கள் கடிதமும் "சித்திரமும் சிறுவர்களும்" என்ற புத்தகமும் உரியபொழுது வந்தன. தங்கள் நோக்கம் சாலவும் சிறந்தது. தங்கள் முயற்சி உலகிற்கு பயனளிக்குமென இறைவனை வேண்டுகின்றேன்.

தங்கள்,

(Sd) த. வே. உமாமகேசுவரன்.

---

பிழை திருத்தம்.

முன்னுரையில் பழமைக்கால.........மென்பதை பண்டைக்காலமெனவும் இன்னும் சில எழுத்துப் பிழைகளையும் வாசகர்கள் திருத்தி வாசித்து கொள்ளக் கோருகிறோம்.

K. V. P.

# முன்னுரை.

அன்பர்களே! மாணவர்களே!!

சித்திரமென்னும் வித்தை, பழமைகாலத்திலிருந்து நமது இந்தியா தேசத்தில் நன்கு பழகப்பட்டு வந்திருந்த போதிலும், இடையில் பல வேறு காரணங்களால் அதன் அவசியமும், உயர்வும், சிறப்பும், குறைவுபட்டு, பிறகு ஆங்கில அரசாட்சியின் காலத்தில் சித்திரக்காரர் என ஒரு வகுப்பார் மட்டிலும் பழகி தேர்ச்சியடையும் வழக்கத்தை நீக்கி, பற்பலரும் பழகக்கூடியது என்கிற ஓர் சிறந்த நோக்கத்தை யாவரும் பழகி நன்குணரும்பொருட்டு அதனைச் சகல கல்விச்சாலைகளிலும் பழகிக்கொள்ளத்தக்க ஏற்பாடுகள் செய்திருப்பதும் தவிர (Trainng schools & Colleges) போதனமுறை கல்விச்சாலை, கலாசாலைகளிலும் சித்திர பழக்கத்தை கட்டாயப்பாடமாக ஏற்படுத்தியிருப்பதும் இக்காலத்தில் பலரும் அறிந்தவைகளே.

ஆயினும் நம் நாட்டின் மாணவர் மாணவிகளாகிய சிறுவர் சிறுமிகள் சுலபமான வழியில் சித்திரம் கற்கும்வண்ணம் தகுந்த புத்தகங்கள் இல்லாமலிருப்பதும் ஓர் பெருங்குறை. சித்திர வித்தையின் அவசியத்தையும் சிறப்பையும் உயர்வையும் சித்திர நிபுணர்களின் உதவியினாலே அரசாங்கம், கைத்தொழில் வியாபாரம் முதலிய உலகவிஷயங்களும், கடவுளின் அளவிடமுடியாத வல்லமைகளைக் கண்டறிந்து ஆனந்தமடையும் பரலோக சாதனங்களையும் மிக்க சுலபமான வழியில் புகட்டி நம் மாணவச் சிறுவர் சிறுமிகளுக்கு ஆசையை ஊட்டும் புத்தகங்கள் இல்லையென்று சொல்லுவதும் மிகையாகாதென்றே எண்ணுகின்றேன்.

ஏனெனில் தற்கால நிலைமையில் மலிந்துகிடக்கும் பல புத்தகங்களும் பெரும்பாலும் காலத்தைப் போக்கும் கதைகளாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவாத நடை நொடிகளை வாரி இறைக்கும் வர்ணனைகளை விழுங்கியதாகவும், இன்னும் பற்பல விதமாகவுமிருப்பதும் தவிர நாட்டிற்குரிய மொழியில் கைத்தொழில் முதலிய மெய்த்தொழில்களின் ரகசியங்களைப்பற்றி பேசும்புத்தகங்கள் உலக புத்தக சபையில் மிகுந்த சிறு தொகையென சொல்லுவதும் மிகையாகாது.

ஆனதால், அன்பர்களே! அறுபத்துநான்கு கலைக்ஞானங்களில் ஒன்றாகிய சித்திரவித்தையில் மறைந்துகிடக்கும் ரகசியத்தைப்பற்றியும் அதன் அவசியத்தைப்பற்றியும் அதனால் நம் நாட்டு மாணவர், மாணவிகள் அடையக்கூடிய பொருள் புகழைப் பற்றியும் அடியேனுடைய சிற்றறிவுக்கெட்டிய அளவு சொல்ல முன் வந்தது நம் நாட்டின் முன்னேற்றத்தின்மீது கொண்ட அளவு கடந்த ஆசையேயொழிய, உண்மையில் ஆற்றலுண்டென்று அல்ல. மேலும் சித்திரவித்தையைப் போதிக்கும் நூல்ஒன்று பின்பு எழுதவேண்டுமென்று ஆசை தூண்டுவதினால் அதனைப்பற்றி தற்சமயம், சம்பாஷணை முறையில் ஒரு சிறு புத்தகம் எழுத முன் வந்தது மிகவும் நன்மையென்றே பலரும் எண்ணுவார்களென்று நம்புகின்றேன்.

குறிப்பு:—சித்திர வித்தையைப் போதிக்கும் புத்தகத்தில் பலவகையான சித்திரப் படங்களுடன் மிகவும் விரிவாக எழுதி வெளியிடவேண்டுமென்று ஆசை தூண்டுவதினால், இச் சிறு புத்தகத்தில் இரண்டொரு சித்திரப்படங்களுடன் நவீன நாகரீகத்திற்கிணங்க மாணவர் சம்பாஷணை முறையில் அதன் அவசியத்தைப்பற்றியும், சிறப்பைப்பற்றியும் எழுதப் பெற்றிருக்கிறது.

டி. எஸ். பாலசுந்தரம்,

சித்திர ஆசிரியன்.

# சித்திரமும் சிறுவர்களும்.

(முத்து, சுந்தரம் என்கிற இரண்டு சிறுவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்).

---

சுந்தரம்:— எனது பிரிய நண்ப! மாலைவந்தனம்.

முத்து:— வந்தனம். வந்தனம். எனது அருமை நண்ப! எங்கே, சுமார் நான்கு நாட்களாக உன்னைக் காணக்கூடவில்லை. தவிர, உன்னைப்பார்த்த மாத்திரத்தில் ஆங்கில நாட்டு பழக்க வழக்கத்தை கைக்கொண்டவன் போல தோன்றியபோதிலும் நம் இந்தியநாட்டுப் பழமையான வழக்கமாகிய வந்தனம் அதாவது இருகைசேர்த்து தலை குனிந்து வந்தனஞ்செய்யும் ஓர் நல்ல வழக்கத்தையும், அன்பையுங்காட்டும் வந்தனமரியாதையை நீ எப்போதும் மறவாததைப்பற்றி நிரம்ப மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏனெனில் தற்காலம் மரியாதையும் அன்பும் பலவாறாக சிதறுண்டுபோய் இன்னது மரியாதை இன்னது மரியாதையல்லவென்று அறிந்துகொள்ளமுடியாதபடியிருக்கும் இக்காலத்தில் நமது பழைய வழக்கத்தை கைநழுவவிடாது அனுசரித்துவருவது நல்லதல்லவா?

சுந்தரம்! இன்னும் பார் சலாம் செய்யும் அன்னியநாட்டு வழக்கம் ஐந்து விரலிலிருந்து ஒரு விரலுக்குத் தாவியிருப்பதும், தலையை அசைப்பது முதலிய அன்பற்றவும், மரியாதை அற்றவுமான வந்தனங்கள் வந்தனமாகுமா?

இக்காலத்தில்பார், சில சிறுவர்கள் அவசியமாகவோ அல்லது ஆடம்பரத்திற்காகவோ மிகுந்த இளமையிலேயே கண்ணுக்

குக் கண்ணாடி போட்டுக்கொள்ளுகிறார்கள். அத்தருணத்தில் தனது மற்ற விரல்களை மடக்கி, ஆள்காட்டி விரலைநீட்டித், தனது கண் பக்கமாகச் சாய்த்து வந்தனஞ்செய்ய முன் வருகிறார்கள். அப்போது பிறருக்கு என்ன தோன்றக்கூடியதாகவிருக்குமென்றால், "பார்! இந்த வயதிலேயே பகவான் என் கண்ணைக்கெடுத்து வைத்திருக்கிறார்" என்கிற அர்த்தத்தை சுட்டிக்காட்டுவதோ? என்று தோன்றும் அல்லவா? என்ன செய்வது? காலம் அப்படியல்லவா ஆகிவிட்டது. ஆனால் நீ அதையெல்லாம் தள்ளி வந்தனஞ்செய்யும் ஓர் நல்ல முறையை அனுசரித்துவருவது மிக்க நல்லதே. இதில் நீயும் நானும் சுகமாய் இருக்க கடவுள் கிருபை செய்திருக்கிறார். இருவருடைய சிநேகமும் அன்பும் வளர்ந்து நெருங்கட்டும். நமக்குள் வேற்றுமை கிடையாது ஆனதால் இவ்வித நல்வாழ்வுகளுக்கு தலைவனாகிய கடவுளிடம் வணக்கஞ் செய்து இனி மென்மேலும் சகல சம்பத்தையும் அடைவோம் என்கிற ஓர் அறிகுறியும் அவ்வாறே நானும் என்று இருகை சேர்த்து தலை குனிந்து வணங்கும் வந்தன முதலிய கருத்துகளை நீ நன்கு உணராதது அல்ல.

நண்பனே! இது இருக்கட்டும் உன்னை நான்கு நாட்களாக பார்க்கமுடியவில்லையே ஏன்?

சு:— நண்ப! புதிதாகவும், அருமையாகவும் ஓர் சிறிய புத்தகமொன்று கிடைத்தது. அதன் மூலியமாக எனது மாலைப் பொழுதைக் கழித்துவிட்டேன். ஆனதினால் உன்னைப்பார்க்க முடியவில்லை. அதற்காக மன்னிக்கவும்.

மு:— மாலைப்பொழுதில் வெளியில் உலாவி நல்ல காற்றை சுவாஸிப்பதையும், கொஞ்சம் தேக அப்பியாசம் எடுத்துக் கொள்வதையும் விட்டு, அவ்வளவு அவசியமாக படித்தறிய வேண்டிய புத்தகமா அது? என்ன புத்தகமது?

சு:— நான் நல்லகாற்றை சுவாசிப்பதையாவது, தேகாப்பியாச நடையையாவது குறைத்துக்கொண்டதாக நீ நினைத்து விட்டாயா? அப்படியல்ல, புத்தகத்தைக் கையில் எடுத்துக்

கொண்டே ஆற்றங்கரைக்குச்சென்று, அங்கு ஒரு தனியிடத்தில் சுத்தமான மணலில் உட்கார்ந்து படித்து புத்தகத்தையும் முடித்துவிட்டேன். ஆனால் வழக்கம்போல உன்னுடன் கூடிக்குலாவி அங்குமிங்கும் ஓடி பலவித ஆட்டங்கள் ஆடும் காலத்தை இழக்க நேரிட்டதே தவிர, மற்றப்படி சுகாதார விஷயமாக நான் எதையும் அசட்டைசெய்யவில்லை. ஆனால் உன்னுடன் கழிக்கும் காலத்தை அப்புத்தக மூலமாக கழிக்க நேர்ந்ததைப் பற்றி மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். நான் சொல்வ—

மு:— சுந்தரம்! அப்புத்தகத்தில் என்ன அவ்வளவு முக்கிய விஷயங்களிருக்கிறதா? என்ன புத்தகமது?

சு:— ஆமாம் நிரம்பவும் புதிதான புத்தகந்தான் அம்மாதிரி புத்தகம் இதற்குமுன் நான் பார்த்ததில்லை. அப்புத்தகத்தின் பெயர் "சித்திரமும் சிறுவர்களும்" என வழங்குவதாகும்.

மு:— சபாஷ்! சித்திரமும் சிறுவர்களும் என்கிற புத்தகத்திலா அநேக அவசிய விஷயங்களும் மனதிற்கு மகிழ்ச்சியைத்தரும் சொல் நயம், பொருள் நயம், முதலிய அநேக கருத்துகளும் நிறைந்திருக்குமென்று எண்ணிவிட்டாய் பேஷ். பேஷ் நன்றாகச் சொன்னாய், ஏதோ அருமையான நாவல்களோ அல்லது வேறு ஜீவிய சரித்திரம் முதலியவைகளோ என்றல்லவா, நான் முதலில் எண்ணியிருந்தேன். விஷயம் இவ்வளவுதானோ?

சு:— முத்து! அவசரப்படக்கூடாது புத்தகத்தின் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே, புத்தகத்திலுள்ள விஷயமுழுவதையும் அறிந்துவிட்டதுபோல பாவிக்கிறது நல்லதா? அல்லது ஒருதாம் படித்துப்பார்த்து ஓர்வித முடிவுக்கு வருவது நல்லதா? நான் இவ்விதம் சொல்லுவதில் கோபித்துக்கொள்ளமாட்டாயென்று நம்புகிறேன். ஏனெனில்—

மு:— என்ன சுந்தரம், அகத்தினழகு முகத்தில் தெரியுமென்பதுபோல புத்தகத்தின் தலைப்பெயரிலேயே புத்தகத்தில் இன்ன விஷயங்கள்தான் அடங்கி இருக்குமென்று யூகிக்க முடியாதா?

சு:— நீ சொன்னது இதற்குப் பொருந்தாது அச் சிறு புத்தகத்தில் அநேக நல்ல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றை நீ ஒருதரம் படித்துப்பார்த்தால் நான் சொல்லும் உண்மை விளங்கும். தவிர இன்று சிறுவர்களாகவும் விளையாட்டுப் பிள்ளைகளாகவுமிருந்து நாளை (சிலநாள் கழித்து) குடும்பத் தலைவர்களாகவும், பல தொழிலாளியாகவும், உத்தியோகஸ்தனாகவும், பொது ஜனத்தலைவர்கள் முதல் பல பெரியோர்களாகவும் வரவிருக்கும் சிறுவர்களுடைய மனதில் நாட்டின் முன்னேற்றத்திற்கும், அவசியத்திற்கும் வேண்டிய பல தொழில்களின் ரகசியங்களையும் அதற்கு இன்றியமையாததாகிய சித்திர வித்தையின் உதவியைப்பற்றியும் மற்றும் பல விஷயங்களைப்பற்றியும் தெளிவான நடையில் எழுதியிருப்பதை நீ ஒருதரம் முழுமையும் படித்துப்பார்க்க வேண்டுமென்றே கோருகின்றேன். ஆனால்,—

மு:— எல்லா புத்தகங்களையும் நுனி முதல் அடிவரையில் படிப்பதென்றால் எல்லாராலும் ஆகக்கூடியதா? அதற்குக் காலமும் மற்ற சௌகரியங்களும் வேண்டாமா? நீதான் மிக்க ஊக்கமாக படித்து முடித்திருப்பதாகச் சொல்லுகிறாயே கொஞ்சம் சுருக்கமாக சொல்லிவிடுவது நன்மையல்லவா? அப்படிச் செய்ய மனமில்லையா என்ன?

சு:— ஆகா அவ்விதமே செய்கிறேன் கவனமாய்க் கேட்டால்போதும். முதலாவதாக பண்டைக்கால சித்திரத்தைப் பற்றி சொல்லியிருப்பவைகளைச் சொல்லுகின்றேன். தவிர ஒலி வடிமாக இருந்த பாஷைகள் வரிவடிவமாக நின்று ஓர் ஒழுங்கு பெற்றது சித்திரத்தின் உதவியே என்றும் பிறகு இச் சித்திர பழக்கத்தின் விசேஷத்தினாலே இக்காலத்தைப்போல அல்லாது அச்சு இயந்திரம் முதலியவைகள் இல்லாத அக் காலத்தில் பல ஓலைச்சுவடிகள் முதலியன, எழுத்தாணி என்னும் ஓர் இரும்பு ஆயுதத்தினால் பனவோலையில் எழுதி அதனை நம்போன்ற பலருக்கும் அக்கால புத்தகமாகப்படிக்க உதவியதாகவும் பிற

நாளடைவில் இக்காலத்தைப்போல காகிதம், பென்சல், ரப்பர் முதலியவைகள் இல்லாத அக்காலத்தில் சுவற்றிலே அடுப்புக் கரியினுல் எழுதிப் பழகி வந்தார்களென்றும் பிறகு நாளடைவில் பாரம்பரையாகத் தேர்ச்சியடைந்து, சித்திரக்காரர் என ஓர்வகுப்பு தொழிலாளர்களால் பலகையிலும், துணியிலும், தோலிலும், கண்ணுடியிலும், அப்பிரேகத்தகட்டின்பேரிலும், காகிதத்திலும் வரையும் பல சித்திரப்பழக்கங்கள் பழகி மிகவும் சிறந்து இருந்த தென்றும் இன்னும் படிப்பு வாசனேயே இல்லாத பல பெண்கள் தங்களது கை கால்களில் பச்சைக் குத்திக்கொள்ளுவது என்ற ஓர்வித சித்திர பழக்கம் இருந்து வந்ததை இக்காலத்திலுங்கூட பலரிடம் பார்க்கலாமென்றும் தவிர நமது இந்திய நாட்டுப் பெண்கள் பலரும் தரையில் கோலம்போடும் ஓர்வித சித்திரப் பழக்கம் நாளது வரையிலுங்கூட நன்கு பழகப்பட்டுவந்துகொண் டிருக்கிறதென்றும் இன்னும் இவைமுதலான விஷயங்களேப் பற்றி அப்புத்தகத்தில் வெகு தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கிறது.

மு:— என்ன? சுந்தரம்! ஒலிவடிவமாகயிருந்த பாஷை வரி வடிவமானதிற்கும், சித்திரத்திற்கும் என்ன சம்பந்தம்?

சு:— முத்து! சொல்லுகிறேன் கேள். ஒலிவடிவமாக இரு ந்த பாஷை வரிவடிவமாவதற்கு எழுத்துகள் அவசியமல்லவா? அவ்வெழுத்துகளெல்லாம் நேர்க்கோடு, வளேவுகோடு, சாய்வு கோடு, முதலியன சேர்ந்தல்லவா உண்டாகின்றது. அவ்வித கோடுகளே அமைப்பதில் ஒழுங்கும், சட்டதிட்டங்களும் ஏற் பட்டிருக்கின்றனவென்பதை நீ அறியாயோ? அவ்விதமாகப் பற் பல எழுத்துகளுக்கும் உருவ பேதத்தை அமைத்து அதனின்று ஒலி பேதத்தை விளப்பக்கூடியது சித்திர அமைப்பல்லவா? உதாரணமாக "படம்பார்த்தேன்" என்பதில் முதல் எழுத்து "ப" இவ்வெழுத்தில் வலதுபக்கம் மேலே கொஞ்சம் வளேத்து அதா வது வளேவுகோடு ஒன்றைச் சேர்த்துவிட்டால் "ம" ஆகி கடைசி யில் வார்த்தை "மடம் பார்த்தேன்" என்றல்லவா ஆகிவிடும். அவ்

வாறே "ப" என்னும் எழுத்தில் ஓர் சிறிய நேர்கோடு வலது பக்கம் கீழ்ப்புறமாக இழுத்துவிட்டால் "பு" என்னும் எழுத்தாக மாறி கடைசியில் "புடம்பார்த்தேன்" என்றல்லவா முடியும். ஓர் எழுத்தில் மாத்திரம் கொஞ்சம் வளைத்தும், கொஞ்சம் இழுத்தும் செய்யக்கூடியதில் இவ்வளவு அபிப்பிராய பேதமும் அர்த்தபேதமும் உண்டாவதென்றால் மற்ற எழுத்துக்களின் உருவ சட்டதிட்டங்களைப்பற்றி அதிகஞ் சொல்லவேண்டுமா? "படம் பார்த்தேன்" என்பதற்கும், "மடம் பார்த்தேன்" என்பதற்கும். "புடம்பார்த்தேன்" என்பதற்கும் ஒரே ஒரு எழுத்துக் கொஞ்சம் வளைவதினாலும், கொஞ்சம் கீழ்நோக்கி நீளுவதாலும் எவ்வளவு வித்தியாசம் ஏற்படுகிறது பார்த்தனையா? ஆகையினாலே "நாடு முன்னேற்றமடைய ஏடு முக்கியம்" என்பதற்கிணங்க ஒருவருடைய ஒலிவடிவமான அபிப்பிராயத்தைப் பல ஆயிரம் பேர்கள் கண்டறியக்கூடியதாக எழுத்துவடிவமாக ஆக்கி நிற்பது சித்திரமல்லவா? ஆகையினாலே அப்புத்தகத்தில் "சித்திரம் உலக போது பாஷை" எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

மு:— சுந்திரம்! அஃது எப்படி? சித்திரம் உலகப் பொது பாஷையா? இதென்ன புதுமை! சித்திரம் எப்படி பாஷையாகும்? இன்னும் உலகப் பொதுப்பாஷை என்று சொன்னாயே அஃது எப்படி சுந்தரம் பொருந்தும்?

சு:—எனது பிரிய நண்ப! சொல்லுகிறேன் கேள் முதலாவது நாம் பேசும் ஒலி வடிவமான பாஷை, அல்லது மொழி, சித்திரத்தின் உருப்புகளாகிய நேர்க்கோடு, வளைவுகோடு முதலானதுகளால் உடல் வடிவமாக நின்றதென்றும், பிறகு அவ்வுடலைப் பார்த்த மாத்திரத்தில் உயிராகிய ஒலியைக் கிளப்ப வல்லதாக இருக்கிறதென்பதையும், நீ அறிந்துகொண்டாயல்லவா? அவ்வாறே உலகத்திலுள்ள எந்தப் பாஷைகளையும் இவ்வித நேர்கோடு, வளைவுகோடு முதலியவைகளைக்கொண்டு சித்திர நிபுணர்கள் வரைந்து முடிக்கக்கூடுமென்றும், அவ்வாறே வரையப்பட்டிருக்கிறதென்றும் ஆகையினால் எப்பாஷைக்கும் (அதா

வது அதனுடைய எழுத்துகளை அமைக்க) வளைவு கோடு நேர் கோடு முதலியவைகள் பொதுவாகயிருப்பதால் மேற்படி வளைவு கோடு நேர்கோடு முதலியவைகளையுடைய சித்திரவித்தை உலகப் பொது பாஷை என்றும் இன்னும் பாஷை தெரியாது சித்திர மட்டிலும் தெரிந்த சித்திர நிபுணர் எந்நாட்டிற்கும் சென்று எவ்வெழுத்துகளையும் அமைத்துக்கொடுத்து அந்நாட்டினர்களின் அன்பையும் ஆதரவையும் பெறலாமென்றும், இன்னும் பறவை, மிருகம், மனிதன் முதலிய எல்லாவகை உருவங்களையும் அமைக்கக்கூடிய சித்திரம் எந்நாட்டிற்கும் பொதுவானதென்றும் அப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

என்ன முத்து! சற்று ஆழ்ந்து சிந்திக்கிறாய் உனது முகத்திலிருந்து உனது கருத்தை வெளியிடுகிறேன் கேள். அதாவது ஒரு பாஷை கற்றவர், தமிழ் மட்டிலுமே கற்றவர் என்று வைத்துக்கொள்ளுவோம் அவர் அம்மொழியேயில்லாத இந்துஸ்தானி அல்லது இங்லிஷ் வழங்கும் நாட்டிற்குச் சென்றதாக வைத்துக் கொள்ளுவோம். பாஷை என்பது தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் ஓர் கருவியல்லவா? ஆகையினால் அங்கு போயிருக்கும் புலவர் அந்நாட்டினரின் பாஷை தெரியாததினால் அவர்களிடம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவோ அல்லது வேறு எந்தவிதமாகவாவது அவர்களோடு கலந்து உறவாடவோ முடியுமா? அந் நாட்டினர் தான் அப்பாஷை தெரியாத அவர்மீது அன்பாயிருக்கமுடியுமா? இதை நன்றாக யோசித்துப்பார். ஆனால் அப்பாஷை தெரியாத சித்திர நிபுணர் ஒருவர் அம்மாதிரி அந்நாட்டிற்குப் போனால் தனது அபிப்பிராயத்தை சித்திர ரூபமாக வரைந்துகாட்டி விஷயத்தை வெளியிடமுடியும். தவிரவும் இந் நிபுணர் கற்றிருக்கும் உலகப் பொது பாஷையாகிய சித்திரத்தின் உதவியால் அங்குள்ள பல உருவங்களையும் வரைந்து, அவர்களுக்கு மகிழ்ச்சியையுண்டாக்கக்கூடும். அவர்களும் இவரோடு நெருங்கிப் பழகி அன்போடிருக்கலாமல்லவா? இதனை யோசிக்குங்கால் சித்திரம் உலகப் பொதுபாஷை என்பது நிரம்ப பொருத்தமானதே. இன்னும் சித்திர நிபுணர்கள் எந்நாட்டிற்

குச் சென்றாலும் இவர்கள் பழகி இருக்கும் சித்திர உருவ வமைத்தல் பற்பல நாட்டிலுமுள்ள எப்பொருள்களையும் வரைய ஏற்றதாக இருக்கிறதல்லவா? ஆகையினாலே முன் சொன்ன விஷயம் மிகவும் பொருத்தமானதென்பதற்கும் உண்மையான தென்பதற்கும் என்ன தடை?

மு:— சுந்தரம், உண்மைதான் நீ சொல்லிய யாவும் நிரம் பவும் சரியானவைகளே. ஆனால் பண்டைக்காலத்தில் சித்திர வித்தை எப்படியிருந்தது அதனைப்பற்றி அப்புத்தகத்தில் ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா?

சு:— ஆமாம் முத்து. நான் முன் சொன்னவைகளைப் போலவே பண்டைக்காலத்தில் சித்திரம் நன்கு பழகப்பட்டிருந் தாலும் பின்பு முகலாய ராஜ்யம் அரசாண்ட காலத்தில் அதனைச் சிலர் மிக்க குறிகிய நோக்கத்தோடு வெறுத்தும், சித்திரத்தை யாரும் பழகாமல் தடுத்தும் வந்ததாகவும், பிறகு முகலாய சக்கரவர்த்தி அக்பர் காலத்தில் மறுபடியும் அதனுடைய உயர்வை ஊன்றிப்பார்த்து வெகுவாக அதனைப் பாராட்டி பேசி யிருப்பதாகவும் தெரிகிறது.

அவையாதெனில் "சித்திர வித்தையை வெறுப்பவர்மீது எனக்கும் வெறுப்புதான் கடவுளை அதிகமாக அடிக்கடி நினைப் பவன் சித்திரக்காரனே என்று அவர்கள் அறியக்கடவார்கள். ஏனெனில் அவன் எவ்வளவு உயிர் வடிவமாக படம் எழுதியபோ திலும் தான் அதற்கு உயிர் கொடுக்க முடியாதென்றும், கடவுள் ஒருவரே அந்த அற்புத சக்தி வாய்ந்தவரென்றும் அவனுக்குத் தெரியும்" என்று அவர் அரசாண்ட காலத்தில்பேசியிருக்கிறார்.

குறிப்பு:—இதனை நம் தேசமக்கள் பலமுறைப்படித்து ஊன்றிப்பார்க்கவேண்டியது மிகவும் முக்கியம். இன்னும் இக் காலத்தில்கூட தஞ்சாவூர் முதலிய இடங்களில் பல பரம்பரைச் சித்திரக்காரர்களால் பலவகையான தெய்வப்படங்களும் அதனில் முத்துகள், பலவித கற்கள் வைத்துப புதைத்த படங்களும் தயாராகிவருவதை இன்னும் பார்க்கலாம் என்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

மு:— ஆனால் சுந்தரம், இந்த ஆங்கில அரசாட்சியில் சித்திரத்தைப்பற்றி ஏதேனும் சொலலப்பட்டிருக்கிறதா? இதைத் தவிர நாகரீகமடைந்த மற்ற நாடுகளின் சித்திரப் பழக்கத்தைப் பற்றியும் ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா?

சு:— நண்ப! நீ இப்போது கேட்ட கேள்விகள்தான் மிகுவும் முக்கியமானது ஏனெனில் பலர், முன்னாளில் நம் நாடு அப்படியிருந்தது இப்படியிருந்தது என்று பலவாறு புகழ்ந்து பேசுவதோடு நின்றுவிடுகிறார்களேயொழிய தற்கால நிலமையை நன்குணர்ந்து நம் நாடு முன்னேற்றம் அடையும் வழிகளைப் பற்றிச் சிறிதும் கவனிப்பதேயில்லை. ஏனெனில் "சொல்வ தெளிது அவ்வண்ணம் செய்தலரிது" என்பதற்கிணங்க வெறும் பேச்சுக்களால் மாத்திரம எதுவும் கைகூடிவிடுமா? ஆகையினால் தற்கால நிலைமையில் இவ் வாங்கிலேய அரசாட்சியில் சித்திர வித்தை எப்படி கையாளப்பட்டு வருகிறதென்று கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமே. ஆனால் அப் புத்தகத்தில் ராஜாங்கம் நடைபெறுவது சித்திர நிபுணர்களின் பேருதவியினாலே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மூ:— என்ன சுந்தரம்! நீ சொல்வது எல்லாம் மிக்க புதுமையாகவே இருக்கிறது. இராஜாங்கம் நடை பெறுவது சித்திர நிபுணர்களின் பேருதவியினாலா? அஃது எப்படி? இராஜாங்கம் நடைபெறுவதற்கும் சித்திர நிபுணர்களுக்கும் என்ன சம்பந்தம்? இராஜாங்கம் நடைபெறுவது இராணுவ பலத்தினால் என்றால் நிரம்பப் பொருத்தமாகவிருக்கும். அதைவிட்டு சித்திர நிபுணர்களால் என்று எப்படி சொல்லக்கூடும்?

சு:— உண்மைதான் முத்து. நானும் அவ்வாசகத்தை முதலில் படித்தவுடனே உன்னைப்போலவே எனக்கும் சந்தேகம் உண்டாயிற்று. ஆனால் முற்றிலும் படித்தபிறகே உண்மை தெரிந்தது.

மு:— எங்கே நீ தெரிந்த உண்மைகளைச் சொல் பார்ப்போம்.

சு:— முதலாவது நீ சொன்ன இராணுவ பலத்திற்கும் சித்திர உதவியில்லாமல் ஆகா. அஃதெப்படியென்றால், இராணுவமென்றால் இக்காலத்தில் வெறும் ஆள்க்கூட்டமென்று நினைத்துக்கொண்டாயா? அப்பப்ப! அம்மாதிரி அல்ல. பலவித ஆயுதங்கள், பீரங்கிகள், மெஷின் பீரங்கிகள், பலவித கப்பல்கள், முதலியவையெல்லாம் கொண்டதல்லவா இராணுவம் அல்லது சேனைகள். இவ்வித சேனைகளுக்கு வேண்டிய பலவித ஆயுதங்களைத் தயாரிக்க என்னவேண்டுமென்று உனக்குத் தோன்றுகிறது?

மு:—ஆயுதங்கள் செய்யும் கொல்லர்கள் வேண்டும். இது கூடத் தெரியாதா?

சு:— கொல்லர்கள் எதன்படி ஆயுதங்கள் செய்வார்கள்?

மு:— இதென்னவையா! பிரமாதமாகக்கேள்வி, கத்தி செய்யென்றால் செய்கிறார்கள். துப்பாக்கிசெய்யென்றால் செய்கிறார்கள். இன்னும் என்னென்னவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்கிறார்கள். இதுகூடவா தெரியாது?

சு:— முத்து அவசரப்படாதே நான் கேட்டதை நீ சரியாக ஆழ்ந்து யோசித்து விடை சொல்லவில்லையென்பதை நீயே உணர்ந்து கொள்ளப்போகிறாய்.

மு:— என்ன சுந்தரம், எடுத்ததற்கெல்லாம் ஆழமாக யோசிப்பதா, சுவாசிப்பதா?

சு:— முத்து, இப்போது பரிகாசக் கச்சேரியில் இறங்கி விடாதே.

மு:— ஆனால் என்ன?

சு:— இவ்வூரிலுள்ள பெரிய கட்டிடங்கள் ஏதாவது கட்டினதை நீ பார்த்ததுண்டா?

மு:— ஆமாம் எத்தனையோ கட்டிடங்கள் பார்த்துமிருக்கிறேன். இன்னும் பார்த்துக்கொண்டுமிருக்கிறேன்.

சு:— சுமீபத்தில் கட்டின இப் புதுமார்க்கெட் எதன்படி கட்டினார்கள தெரியுமா?

மு:— ஆம். ஓர் பிளான்படி கட்டினார்கள்.

சு:— இப்போதுதான் நீ வழிக்குவந்தாய். கட்டிடம் கட்டுபவர்கள் கொத்தன், தச்சன், முதலானவர்களல்லவா? ஏதோ பிளான் என்று சொன்னயே அதற்கும், கட்டிடத்திற்கும், கொத்தன், தச்சன், முதலானவர்களுக்கும் என்ன சம்பந்தம்? இதைத்தவிர பிளான் என்னும் தரைப்படம் அமைப்பவர்கள் யார் தெரியுமா உனக்கு?

மு:— ஆமாம் சுந்தாம். இப்பொழுதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. பிளான் எதற்கும் முக்கியமாக வேண்டும். அப்படியானல் ஒவ்வொரு ஆயுதங்கள் செய்வதற்கும் பிளான் வேண்டுமோ, என்ன?

சு:— எனது பிரிய நண்பனே! பிளான் என்னும் அளவுப்படம் எதற்காக வேண்டும் தெரியுமா? நாம் நினைக்கும்படியும், நம்முடைய உபயோகத்திற்குத் தகுந்தபடியும் ஆயுதங்களோ, சாமான்களோ, கட்டிட முதலியவைகளோ, அல்லது உடை, ஆபரணம், முதலியவைகளோ, எதுவாக இருந்தபோதிலும் சரியானபடி, ஒன்றைப்போல பலவும் செய்துமுடிக்க உபயோகம். இதில் அளவும், உருவ அமைப்பும், மற்றும் பலவும். அறியக்கூடும். ஆகையினால் இத்தரைப்படம் என்னும் பிளான் (Plan) அவசியமல்லவா? நண்பனே! இப் பிளான்களை அமைப்பவர்கள் சித்திர நிபுணர்களல்லவா?

மு:— இவர்கள் எப்படி சித்திர நிபுணர்கள் ஆவார்கள்? இவர்கள் பலவித ஆயுதங்களை வைத்தல்லவா கோடு கிழக்கிறார்கள். சித்திர நிபுணர்கள் என்றால் கையினாலே வரைந்து முடிக்கக்கூடிய திறமை உடையவர்களுக்கல்லவா பொருந்தும்.

சு:— முத்து! சற்று நிதானி. கையினல் வரைந்து முடிக்கக்கூடியவர்கள் என்றால் அவர்களுடைய கை விரல்களி

ளூலே வர்ணங்களை வாரி அல்லது அள்ளி இறைப்பவர்கள் என்று அர்த்தமா, என்ன? அப்படியல்ல அவர்களுக்கும் தூருகோல், (Brush) பென்சில், இன்னும் பலவித அளவு சட்டம் முதலிய பல ஆயுதங்களும் உண்டு, அதைப்போலவே கைப்பழக்கம் மிகுதியுமில்லாத இவர்களுக்கும் பலவித ஆயுதங்கள் உண்டு ஆனதால் இவர்களும் அச்சித்திரக்கூட்டத்தொழில் வகுப்பைச் சேர்ந்தவர்களே ஆனதால் முன் சொன்ன எவ்வித ஆயுதங்களைச் செய்யவும் மற்றும் பலவித கட்டிடங்கள், கப்பல்கள் முதலியவைகளைச் செய்யவும், பிளான் அவசியம் தேவை. பிளானின் உதவியால் இன்ன அளவில் இன்ன விதமாக செய்து முடிக்கப்போகிறோம் என்கிற திடமான முன் யோசனையுடனே காரியம் செய்து முடிப்பதாகும். இல்லையெனில் செய்து முடித்தபிறகு அது சரியாகவில்லை, இது சரியாகவில்லை என்று குறை கூறிக்கொண்டு காரியம் மனம்போல கைகூடாததால் வீண் பொருள் நஷ்டமும், கால நஷ்டமும் உண்டாகும் ஆனதால் எப்பொருள்களையும், எவ்வித ஆயுதங்களையும் செய்து முடிக்க முன்னதாகவேண்டியது பிளான் முதலிய உருவப் படங்களே இதனை வரைய சித்திர உதவியில்லாமல் ஆகுமா? இவையல்லாமல் இன்னும் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேள்.

மு:— சுந்தரம். நீ சொல்லுகிற விஷயங்களெல்லாம் சாதாரணமாகத் தோன்றியபோதிலும் அதிலே அநேக உண்மைகளும், நன்மைகளும் இருப்பதில் சந்தேகமில்லை. தவிர, இன்னும் என்ன சொல்லப் போகின்றாய்? கொஞ்சம சீக்கிரமாகச் சொல்லிமுடி.

சு:— ராஜாங்கம் இன்னார் ராஜாங்கமென்றும் இராஜா அல்லது குடியாளசையுடைய இந் நாட்டிற்கு இன்ன அடையாளமென்றும் காணும பலவகை முத்திரைக் காகிதங்களைப் பார்த்திருக்கிறாயா?

மு:— ஆமாம் பார்த்திருக்கிறேன். அவைகளைப்பற்றி என்ன? எல்லாம் அச்சு வேலைகள் அதற்கும் சித்திரத்திற்கும் என்ன சம்பந்தம்?

சு:— சொல்லுகிறேன் கேள். இப்போது வழங்கும் அரையணு கார்டைப் பார்த்தாயா அல்லது இதற்குமுன் வழங்கிய காலணு கார்டையும் பார்த்த ஞாபகமிருக்குமே

மு:— ஆமாம் அதில் என்ன விசேடம்?

சு:— அதில் ராஜாவின் தலையும் சுற்றிலும் பல பூக்கொடி, இலைக்கொடி முதலியதுடன் அவ்வழகிய உருவ அச்சுக்குள்ளே மிகுந்த சிறிய அழகான எழுத்துகளால் அரையணுவென்றும், காலணுவென்றும் அச்சடித்திருப்பதை ஊன்றிப்பார்த்தாயா?

மு:— ஆமாம் பார்த்தேன்.

சு:— இன்னும் நீ கவனித்த விஷயங்கள் என்ன?

மு:— நீ சொன்னதைத் தவிர வேறெதுவுமில்லை.

சு:— உண்மைதான் கைத்தொழிலாகிய மெய்த்தொழிலும் அதற்கு இன்றியமையாததாகிய சித்திரப் பழக்கமும் குறைந்த நம் நாட்டில் நம்போன்ற சிறுவர் சிறுமிகள் இவைகளைப் பற்றி ஆழ்ந்து யோசிக்காதது ஆச்சரியமல்ல. ஆயினும் இனியும் நம் சகோதர சிறுவர்கள் இவ்வாறு நம் நாட்டிற்கு வேண்டியவைகளைப்பற்றி ஆழ்ந்து யோசிக்காது உறங்கிக்கொண்டிருந்தால் நாமும், நம் நாடும் முன்னேறுவதெப்படி? எல்லாம் வெறும் பேச்சாகவேமுடியும். ஆனதால் நாம்—

மு:— நான் எத்தனையோதடவை கால்அணு, அரையணு முதலிய பல முத்திரைக் காகிதங்களைப் பார்த்திருக்கிறேன். அதில் வேறு ஒன்றும் காணக்கூடவில்லையே.

சு:— நன்றாக இனி கவனித்துப்பார். நல்லவேளை இதோ என்னிடமிருக்கும் இக்கார்டைக் கவனித்துப்பார். இந்த நீண்ட வட்டத்திற்குள்ளே அடங்கியிருக்கும் நமது ராஜாவின் இச்சிறு உருவத்தின் மார்பில் ஓர் யானைப்படம் ஒன்று மிகச் சிறியதாக தெரிகிறதா பார். அதுவும் தவிர இந்த யானைப்படத்திற்குச் சற்று மேல் ஓர் (cross) சிலுவைப்படம்

ஒன்று தெரிகிறதா பார். அதைத்தவிரவும் அவ்வுடை என்ன வுடை என்பது உனக்குத் தெரியுமா? அதுதான் ஆங்கில மன்னர்கள் அணிந்துகொள்ளும் பட்டாபிஷேக உடை. இந்த உடைக்கும் சாதாரணமாக ஐரோப்பியர்கள் அணியும் உடைக்கும் வித்தியாசம் தோன்றவில்லையா. இவ்வித இச் சிறு உருவத்தில் யானையின் சிறுவுருவம், சிலுவை, பட்டாபிஷேகவுடை இவைகளையமைத்தது யாரென்றும் ஏனென்றும் உனக்குத் தெரியுமா?

மு:— என்ன சுந்தரம்! இவைகளெல்லாம் எனக்கு மிக்க புதுமையாகவே தோன்றுகிறது, எத்தனையோதடவை பார்த்த இந்த பழைய கார்டில் நீ சொல்லச் சொல்ல ஏதோ புதிய விஷயங்கள் இப்போதுதான் உண்டாகிறதுபோலல்லவா தோன்றுகிறது. ஆமாம் சுந்தரம் நீ சொல்லுவதெல்லாம் அதிலிருக்கின்றன. அவையல்லாமல ஊன்றிப்பார்த்தால் அவ்வளவு சிறிய உருவத்திலே அவைகள் மிகத் தெளிவாகவுமிருக்கின்றன. இவைகளை ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு செய்திருக்கிறார்கள். சாதாரணமாக அரையணா, காலணா என்று அச்சடித்துவிட்டால் போதாதா. இதற்கெல்லாம் அதிகச் செலவும் பிடித்திருக்குமே. தவிர மிகுந்த கஷ்டமான வேலையாகவும் தோன்றுகிறதே.

சு:— என்ன முத்து ராஜாங்கமென்றால் கிள்ளுக்கீரையா? அதுவும் இதைப்போன்ற வல்லரசுகளும் அவ்வல்லரசுகளால் ஆளப்படும் பல பெரிய நாடுகளும் ஒழுங்காகவும் சுலபத்தில் பிறர் அசைக்கமுடியாதபடி நீண்டகாலமாகவும் ஆளவேண்டுமென்றால் அதற்காக நிரம்ப கஷ்டமான காரியங்களைக் கைக்கொண்டால்தான் முடியும். ஏனெனில் சித்திரமொன்றுமில்லாமல் காலணா, அரையணாவென்று அச்சடித்துவிட்டால் வெகு சுலபத்தில் பலரும் அவ்விதமாக அச்சடித்து பல போலி முத்திரைகளை ஒட்டி தபாலில்போட்டுவிடுவார்கள். இதனால் அரசாங்கம் இரண்டு விதங்களில் ஏமாற்றமடைந்து பொருள் நஷ்டமடையும். அவையாதெனில் அரசாங்கத்தாரால் ஏற்கனவே பொருள் செலவு செய்து அச்சடித்த முத்திரைகள் விலையாகா

மல்போய் ஓர்வித பொருள் நஷ்டமுண்டாகும். இரண்டாவதாக அவ்வித தபால் தலைகளை விற்கும் பணத்திலிருந்து தபால் உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளம் முதலியவைகள் கொடுக்கமுடியாமல் திண்டாடி அரசாங்கத்தார் கையிலிருந்து கொடுக்கவேண்டியதாகயிருக்கும். அதுவுமில்லாமல் எல்லோரும் இவ்விதமாக அச்சடித்து வைத்துக்கொண்டு யாதொரு அதிக செலவில்லாமல் தபால் உத்தியோகஸ்தர்களை ஏமாற்றித் தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ளுவார்கள். ஆகவே இவ்விதமான மோசடி விஷயங்களுக்கெல்லாம் இடங்கொடுத்து எந்த அரசாங்கமாவது நடைபெற முடியுமா? ஆகையினுல்தான் சித்திர நிபுணர்களைக்கொண்டு அந்தந்த காலத்தில் அரசாளும் அரசனுடைய தலையையும், அவர்கள் அனுசரிக்கும் மதத்தையும் மற்றுமுள்ள விஷயங்களையும் விளக்க ஓர் அருமையான சித்திரமொன்று ஓர் சிறு அளவுக்குள்ளே அமைத்து அதன் கீழே அரையணுவென்றும், காலணுவென்றும் அழகிய எழுத்துகளால் சித்தரிக்கச்செய்து பின்பு அதனை அவ்வாறே அச்சு இயற்றுவார்கள். இதற்கு நிரம்ப பொருள்ச்சிலவும் பல சித்திர நிபுணர்களின் கூட்டுறவும் இயந்திர சகாயமும்வேண்டும்.

இவ்வித கஷ்டமான காரியங்களை வேறு யாரும் சுலபத்தில் செய்யமுடியாததினுல் அரசாங்கத்தை யாரும் ஏமாற்றமுடியாமலும், பொருள் நஷ்டமுண்டாக்கமுடியாமலும், அரசாங்க சட்டத்திற்கு அடங்கி நடக்கவேண்டியதாகயிருக்கும். ஆகையினுல் சித்திர நிபுணர்களின் சகாயத்தால் அரசாங்கம் எவ்வளவு ஒழுங்காக நடைபெறக்கூடியதாகயிருக்கின்றது என்பதை இப்பொழுதாவது நீ உணர்ந்தாயா? இவைகளினுல் சித்திர வித்தையின் உயர்வு இவ்வளவு என்று தெரிந்ததா?

மு:— ஆமாம் சுந்தரம் நீ கூறியது முற்றிலும் சரியே பல சித்திர நிபுணர்களின் உதவியைக்கொண்டு இவ்வித அரிய சித்திரவுருவங்களமைத்து அச்சியற்றுவிட்டால் பலரும் ஏமாற்ற முன்வருவார்களென்பது உண்மையே. தவிர இதைப்போல

அரையணு முதல் ஒரு ரூபாய் விலையுள்ள பல தபால் தலை களையும் ஒவ்வொன்றும் வேறுவித நிறத்தோடு பற்பலவித சித்திரவேலைகளையுடைய பூ, இலை, கொடிகளுடன் அச்சடித்து விற்பதை தபால் ஆபீசில் நான் ஒருதடவை எனது அண்ண னுடன் போய் பார்த்துமிருக்கிறேன். ஆனால் அரையணு தபால் தலைமுதல் நான் பார்த்த ஒரு ரூபாய் தலைவரையில் ஒரே மாதிரியில்லாமல் பலவித வர்ணத்துடனும் பலவிதமான மாறு பட்ட இலை, கொடி சித்திரத்துடனும் அமைக்கவேண்டிய அவசி யம் என்ன? எல்லாம் ஒரே நிறத்துடனும், ஒரேவித சித்திர அமைப்புடனுமிருந்தால் என்ன கெடுதிவந்துவிடும்?

ச:— சபாஷ்! முத்து நல்ல கேள்விகள் கேட்டாய் இவ் வித கேள்வியைக் கேட்டதுந்தான் என் மனம் மிக்க மகிழ்ச் சியையடைந்தது. ஏனென்றால் நான் சொல்லிய ஒவ்வொன் றையும் நன்றாய்க் கவனித்துவந்திருக்கிறாய் என்றதுமல்லாமல் நீ சாதாரணமாகக் கண்ட ஒவ்வொரு பொருளைப்பற்றியும் மிகுந்த உற்று நோக்கும் சக்தியுடனே நீ கேட்ட கேள்விகள் என்னைப் பரவசமாக்குகிறது. தவிர நான் சொல்லியவைகளை வெறும் கதைகளென்று காற்றில் விட்டுவிடாமல் கவன சக்தி யுடனே ஒவ்வொன்றையும் மனதிலிருத்தி இனி மேன்மேலு மறிய விரும்பும் உனது ஆவலை நான் பாராட்டுகிறேன்.

ஏனென்றால் இக்காலத்துச் சிறுவர்களுக்கு இதுதான் மிக்க மோசமாகப் போய்விட்டது. படிப்பதும் ஒப்புவிப்பது வும் பாழும் பரிக்ஷையில் தேறவேண்டுமே என்று ஏதோ எழுது வதும் அதனோடு எல்லாவற்றையும் மறந்துவிடுவதுமே இக்கால இயல்பாகவிருக்கிறதேயொழிய படித்ததை மனதில் வைப்பதும் அதனைப்பற்றி சிந்திப்பதும் அதன்படி நடப்பதும் மிகவும் அரி தாகிவிட்டது. ஆகையினால் உனது கேள்விகளுக்கு இதோ விடையளிக்கின்றேன் கேள். முத்து! நீ பார்த்த தபால் தலைகளில் ஏதாவது ஒன்றில் அரசனுடைய தலையுருவம் மாறுபட்டிருந்ததா அல்லது அதைச் சுற்றிலுமுள்ள இலை, கொடிகளும் நிறமட்டி லும் மாறுபட்டிருந்ததா?

மு:— அரசனுடைய தலையுருவம் மாறுபடவில்லை அதனைச் சுற்றிலுமுள்ள இலை, கொடி முதலிய வளைவுகளும் நிறங்களும் விலைகளுந்தான் மாறுபட்டிருந்தது.

ச:— சபாஷ் முத்து! பேஷ் மெச்சினேன் உன்னை. நீ மிகவும் நன்றாய் கவனித்துப்பார்த்திருக்கிறாய். ஆனால் அது எதற்காக அவ்விதம் மாறுபட்டிருக்கிறதென்பது உனக்குவிளங்கவில்லையா?

மு:— எனக்கே விளங்கி நானுன்னைக் கேட்பதாக விருந்தால் நான் உனக்கு பரிக்ஷையதிகாரியாகி விடமாட்டேனா, ஏன்? உனக்குத் தெரியாததினால் இவ்வித கேள்வியைக் கேட்டு காலத்தைப் போக்க உத்தேசமா என்ன?

ச:— அவ்வாறொன்றுமில்லை. முத்து. அவசரப்படாதே கொஞ்சம் கவனமாய்க் கேள். முதலாவது வர்ணத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். பலவித நாணயங்களுக்கும் உருவ வித்தியாசமிருப்பதுபோல, பலவித இலைகளை உடைய தபால் தலைகளுக்கும் நிற வித்தியாசம் ஏற்படுத்திருக்கிறார்கள். எப்படி என்றால் பச்சை நிறமுள்ள தலைகளைப் பார்த்ததும் அரையணா தலைகளென்றும் நீல நிறமுள்ள தலைகளைப் பார்த்ததும் காலணா தலையென்றும், சிகப்பு தலைகள் ஒரு அணாவென்றும் நிறத்தைப் பார்த்ததுமே இன்ன விலையையுடைய தலைகள் என்று சுலபத்திலறிந்துகொள்வதற்காகவே இவ்வித வர்ண வித்தியாசங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வித வர்ண வித்தியாசம் முக்கியமாய் தபால் உத்தியோகஸ்தர்களுக்கு வெகுபயனளிக்கின்றது. எவ்விதமெனில் அவர்கள் அதனிறத்தைப் பார்த்தவுடனே இன்ன விலையுள்ள தலைகளென்று கண்டு தாங்கள் கணக்கு வைப்பதற்கும் அதனை விற்பதற்கும் தபால் கட்டணமாக ஒட்டிய தலைகள் சரிதானாவென்றும் வெகு சுலபத்தில் தெரிந்துகொள்ளக்கூடியதாக விருக்கிறது. இன்னும் தெளிவாக சொல்லுமிடத்து நீ ஒரு அரையணா நாணயத்தையோ அல்லது காலணா நாணயத்தையோ பார்த்தவுடனே அதனில் அச்சடித்திருக்கும் எழுத்

துகளை வாசியாமலே காலணாவென்றும் அரையணாவென்றும்
சொல்லிவிடுகிறாயல்லவா, தவிர ஆங்கிலத்தில் அச்சடித்திருக்
கும் இங்கிலீஷ் வார்த்தைகளை வாசித்து அறியமுடியாதவனுங்
கூட இன்னும் படிப்பேயில்லாத மூடனுங்கூட அதனைப் பார்த்த
மாத்திரத்தில் காலணா அரையணா வென்று சொல்லவில்லையா?
அதில் எழுதியிருக்கும் எழுத்தைப் படித்தா சொல்லுகின்றான்?
இல்லை, இல்லை, உருவத்தைப் பார்த்தல்லவா சொல்லுகின்றான்.
அதைப்போலவே தபால் தலைகளிலும் நிற வித்தியாசத்தை ஏற்
படுத்தி அதனால் தங்களுடைய வேலைகளை சுலபத்தில் சரிசெய்து
கொள்ளுகிறார்கள். இல்லையெனில் அச்சிறு உருவத்திற்கு
ளமைந்திருக்கும் மிகச்சிறு எழுத்துகளை ஒவ்வொரு தடவையும்
படித்தறிவதென்றால் எவ்வளவு கஷ்டமும் தடமாட்டமும் உண்
டாகும். இதை நன்றாக யோசித்துப்பார். என்ன முத்து நான்
சொல்லுவது உனக்கு விளங்குகின்றதா?

மு:— ஆமாம் சுந்தரம். நீ சொன்னவைகள் யாவும்
முற்றிலும் சரியே. தவிர இவ்வளவு ரகசியங்கள் அதில் மறை
ந்து கிடக்கின்றனவென்பது நீ சொல்லச் சொல்ல தான் ஒவ்
வொன்றாக தெரிகிறது. இவை நிற்க அரசரின் மார்பு உருவத்
தில் ஓர் சிறு யானை உருவம் தோன்றுகிறதே அது என்ன? அர
சர்கள் எப்போதும் யானையை தூக்கிச் சுமக்கவேண்டுமா? அதி
லும் மார்பிலா தூக்கிச் சுமக்கவேண்டும். இதென்ன வேடிக்கை
அல்லது இதனில் ஏதேனும் ரகசியம் உண்டா என்ன?

சு:— முத்து முன்சொன்ன விஷயங்கள் ஒன்றையும் மற
வாது நல்ல ஞாபக சக்தியுடனே கேட்கின்றாயே அதுவே
எனக்கு மிக்க மகிழ்சியைக் கொடுக்கின்றது. மேலே சொல்லு
கின்றேன் கேள். என்ன வாயைத் திறந்து கொட்டாவி விட்டு
கண்களைப் பிசைகின்றாய் தூக்கமும் சோம்பலும் சேர்ந்து வரு
கின்றதோ?

மு:— இல்லை சுந்தரம் நிரம்ப நேரமாகி விட்டதினாலே
கொஞ்சம் சோம்பல் நான் அழைக்காமலே வருகின்றது. கொஞ்

சம் சீக்கிரமாக சொல்லிமுடித்தால் மிக்க சௌகரியமாக விருக்கும். ஆனால் விஷயம் என்னமோ பெரிதுதான் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியவைகளே.

ச:— இதோ கூடிய சீக்கிரம் எல்லாவற்றையும் சொல்லி முடித்து விடுகிறேன் சற்று கவனமாய்க் கேள். நமது ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவுக்கு சக்கரவர்த்தியாகவும் இங்கிலாந்துக்கு அரசராகவுமிருக்கிறார் என்பதை நீ அறிந்ததே. நம் இந்தியாவைப் போன்ற ஓர் பெரிய தேசத்திற்கு சக்கரவர்த்தியாக விருக்கக்கூடிய பாக்கியம் அவருக்கு கிடைத்ததினாலும் அவருக்குக்கீழ் அநேக சுதேச மன்னர்கள் தங்கள் தங்கள் ராஜீயத்தை ஆண்டு வருவதாலும் இந்திய அரசர்களும் இந்துக்களும் தொண்டுதொட்டு ஓர் சிறந்த ராஜவிருதாகக்கருதும் ஓர் யானையின் உருவத்தை இந்தியாவின் ஞாபகார்த்தமாக அவரது மார்பு உருவத்தில் சேர்த்து சித்திரம் அமைத்து அச்சடித்திருக்கிறார்கள். தவிர இந்தியாவின் ஞாபகார்த்தமாக ஓர் யானையையும் புஷ்பத்தில் தாமரையையும் அரசாங்கத்தார் ஜார்ஜ் சக்கரவர்த்தி கால முதல் அனுசரித்து வருகிறார்கள். இவைகளிரண்டையும் இந்தியாவின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கிலாந்தில் அரசர் என்ற முறையில் வெளியாகும் நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் தபால் தலை உருவங்களில் மேற்படி யானையின் உருவம் காணமுடியாது. தவிரவும் பட்டாபிஷேக வுடை தலையில் அரசர் முடி யாதொன்றுமில்லாமல், மொட்டைத்தலையையுடைய கழுத்து வரையிலுமுள்ள ஓர் உருவமும், தலைக்குமேலே அரசர் முடியின் உருவம் ஒன்றும், கீழே அரை பென்னி, ஒரு பென்னி, ஒன்றரைப் பென்னிகள் என்று பலவித வர்ணங்களுடன் அச்சடித்த தபால் தலைகளைப் பலவித இலைகளுடன் நமது இந்தியாவிலிருப்பதுபோலவே நாம் இங்கிலாந்திலும் பார்க்கலாம். மேலும் பச்சை நிறமுள்ள தபால் தலை அரைப் பென்னி என்றும், ஓர்வித சிகப்பு நிறமுள்ள தபால் தலை ஒன்றரை பென்னிகளென்றும் இங்கிருப்பதுபோல இங்கிலாந்திலும் பிறவித்தியாசங்கள் ஏற்படுத்திருக்கிறார்கள். மேலும்

சுற்றிலுமிருக்கும் பூக்கொடிகள் ஓர்வித அழகுக்கும் அதில் அச்சிடும் வார்த்தைகளுக்கு சமய தகுந்தபடி மாற்றி அமைப்பார்கள். தவிர தாமரைப் பூவின் உருவம் மேற்படி ஜார்ஜ் அரசர் கால முதல் அடிக்கப்படும் நாணயங்களின் ஓர் புறத்தில் காணலாம். இவையல்லாமல் அரசருடைய மார்பில்காணும் ஓர் சிறு சிலுவையின் உருவம் அவர் கிருஸ்து மதத்தைச் சேர்ந்தவரெனக் குறிக்கின்றது. தவிர ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில் அரசாண்ட விக்டோரியா மகாராணி காலத்திலும் அந்தம்மாளுடைய திருக்குமாரன் ஏழாவது எட்வேர்ட் சக்கரவர்த்தி அரசாண்ட காலத்திலும், நம் ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் தபால் தலை முதலிய மார்புருவத்தில் இப்போது நாம் பார்ப்பதுபோல, பட்டாபிஷேக வுடை யானையின் ஓர் சிறு உருவம் சிலுவை முதலியவைகள் அதில் கிடையாது.

இஃது 1912 வருஷம் டிசம்பர் மாதம் 12-ந்தேதி நமது ராஜ சக்கரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் நேரில் இந்தியாவிற்கு வந்து டில்லியில் பட்டம் சூட்டிக்கொண்ட காலமுதல் ஏற்பட்டதாகும்

மு:—இந்த விஷயங்களைக்கொண்டா ராஜாங்கம் நடைபெறுவதற்கு சித்திர நிபுணர்களின் கூட்டுறவும் சித்திரமும் அவசியமென்று சொல்லி முடிக்கின்றாய்?

ச:— இல்லை முத்து, இது மாத்திரமல்ல, நான் முன் சொன்னதுபோல பொருளில்லாவிடில் எந்த ராஜாங்கமாவது ஒழுங்காக நடைபெறுமா? இதனை கவனித்துப்பார். இப்போது ஆயிரம் (1000) ரூபாய் நோட்டுமுதல் ஒரு ரூபாய் நோட்டு வரையில காகிதத்தில் வழங்கி வருவதை நீ அறிவாயல்லவா. பொன் வெள்ளி, செம்பு, நிக்கல் முதலிய லோகங்களே அல்லாததும் வேறு எந்த வகையிலும் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாததுமான ஓர் காகிததுண்டைப் பெற்று இது ஆயிரம் ரூபாய் என்றும் ஐநூறு என்றும் வழங்கியும் பத்திரப்படுத்தியும் வருகிறார்களல்லவா? வெறும் காகிதத் துண்டிற்கா அந்த யோக்கி

யதை? சற்றே கவனித்துப்பார்! சித்திர நிபுணர்களின் உதவியால் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் பலவகைப்பட்ட சித்திர அமைப்பு, எழுத்துகள், வர்ணங்கள் முதலியவைகளினாலல்லவா அதற்கு அந்த யோக்கியதை யுண்டாகிறது அதுவுமல்லாமல் லெட்சக்கணக்காக பெறுமானமுள்ள பங்களா, வீடு, தோட்டம் வயல் முதலியவைகளை கிரயம் செய்துகொள்வது முதலியவைகளுக்காக ராஜாங்கத்தாரால் விற்கப்படும பலவித விலைகளையுடைய முத்திரைக் காகிதங்களை (Stamp papers) நீ பார்த்திருக்கிறாயா! (சில ஜில்லாக்களில் இவைகளை சாப்பா காகிதமென்றும் சொல்லுவார்கள்).

இவைகளில் இரண்டணா மூன்றணா முதல் நூறு ரூபாய் இருநூறு ரூபாய் விலையுள்ள முத்திரைக் காகிதங்கள் உண்டென்பதை நீ அறிவாயா? இவைகளும் சித்திர நிபுணர்களின் சித்திர உதவியினாலேயே அமைக்கப் பெற்று அச்சடித்து அரசாங்கத்தாரால் விற்கப்படுகிறது. வெறும் காகிதங்களாகிய சாமான்ய பொருள்களெல்லாம் சித்திரத்தின் உதவியால் பல ஆயிரம், பல நூறு ரூபாய்கள் பெறுமானமுள்ளதாக ஆகிவிடுகிறது.

ஆகையினால் மேற்சொன்ன அநேக விஷயங்களிலிருந்து இராஜாங்கம் நடைபெறுவது சித்திர உதவியினாலே என்றும் சித்திரமென்னும் ஓர்வித வித்தை, ஒப்பு உயர்வற்ற, சிறந்த ஓர் ராஜதந்திர கருவி என்று சொல்லுவதும் முற்றிலும் பொருந்தும். இன்னும இரண்டொரு விஷயம் சொல்லுகிறேன் கேள். ஒரு ரூபாய் நாணயத்தைப் பார்த்த மாத்திரத்தில் அதனுடைய உருவமும் எடையும், அதற்கிருக்க வேண்டிய ஒலியும் இவை முதலியவைகளெல்லாம் சரியாக விருந்தபோதிலும் அதிலிருக்க வேண்டிய சித்திர வுருவங்கள் தேய்ந்துபோய் வழ, வழவென்றிருந்தால் யாராவது அதனை வாங்குவார்களா? வாங்கவே மாட்டார்கள். ஏனென்றால் அதனிலிருக்கவேண்டிய சித்திர உருவங்கள் தேய்ந்துபோய் விட்டதினால்தான். சித்திர உருவங்களுள்ள வெள்ளி ரூபாய் மதிப்பு பதினாறு அணாவென்றும், சித்திரமில்லாத வெள்ளி ரூபாயின் மதிப்பு அணா பன்னிரெண்டும் அதற்கு

குறைவென்றும் அவ்வாறே சித்திர உருவமுள்ள பொன் நாணய மாகிய பவுனின் மதிப்பு பதினைந்து, பதினான்கு ரூபாய்களென்றும் சித்திரமில்லாவிடின் மதிப்பு குறைவு என்றும் நீயறிவாயல்லவா? ஆகையினால் மேற்சொல்லிய நாணயங்கள் பொன், வெள்ளியாகவிருந்தபோதிலும் அதில் சித்திர உருவங்கள் இல்லாவிட்டால் அவைகள் பலரிடம் செல்லாது போய் விடுவதோடு, அதன் மதிப்பும் குறைகின்றதல்லவா? இதிலிருந்து சித்திரத்தின் உயர்வு எவ்வளவு முக்கிய மென்பது உனக்கு நன்கு விளங்குகின்றதல்லவா?

மு:— ஆமாம் சுந்திரம் சித்திர நிபுணர்களின் பேருதவியினால் அரசாங்கம் நடைபெறுகின்ற விஷயங்களைப்பற்றி இத்தனை நேரம் நீ மிகவும் விளக்கமாக சொன்னதைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன். தவிர அவைகள் முற்றிலும் சரியே. ஆனால் இவைகளல்லாது கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளில் சித்திரம் எப்படி அவசியமென்றும் சித்திர வித்தையின் உதவியினாலே அவைகள் எவ்விதம் விர்த்தியடையக் கூடுமென்றும் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றி அப்புத்தகத்தில் சொல்லியிருப்பதாக நீ முன் சொன்னாயல்லவா? அவைகளெப்படி? நீ கொஞ்சம் சீக்கிரமாகச் சொல்லிமுடி.

சு:— நல்லது முத்து சொல்லுகிறேன் கேள் இத்தனை நேரம் சொன்னவைகள் யாவும் ஓர்வித கைத்தொழிலும் அவைகளை அதனுடைய விலைக்கு விற்பது ஓர்வகை வியாபாரமுமாகும். இவைகளைத்தவிர தச்சு வேலை, கொத்து வேலை, கொல்லு வேலை தட்டார வேலை, நெசவுத் தொழில் முதலிய சகல தொழில்களுக்கும் சித்திர உதவி அவசியமே. இவைகள் ஒவ்வொன்றிற்கும் (Plan) தரைப்படமும் உருவ அமைப்பு முதலிய சித்திரப் படங்களும் அவசியம் வேண்டும். இவையல்லாமல் செய்து முடித்த பல பொருள்களை விற்பதற்கு அதனுடைய உருவச் சித்திரங்களை (Figures) கேட்லாக் (Catalogue) என்னும் விலை விபர அட்டவணையில் அமைத்து பலதேசத்து ஜனங்களும் வாங்கும்படிச்செய்வது சித்திர உருவமல்லவா? இல்லையெனில் எல்லாப் பொ

ருள்களையும் ஒவ்வொருவருக்கும் காண்பிக்கிறதென்றாலும் ஒவ்வொருவரும் எல்லாப் பொருள்களையும் பார்ப்பதென்றாலும் இது ஆகக்கூடிய காரியமா? சித்திர அமைப்புள்ள விலை விபர அட்டவணை யமைத்து அன்னிய நாட்டார்கள் பலரும் தங்கள் வியாபாரத்தில் விர்த்தியடைந்து திரண்ட செல்வம் சம்பாதித்து வருவதை நீ கண்டறியவில்லையா? தவிர மிக நல்ல பொருளாகவும் உறுதியோடிருக்கக் கூடியதாகவுமுள்ள பல பொருள்களைச் செய்து வியாபாரம் செய்யும் பல சிறிய வியாபாரி முதல் பல பெரிய வியாபாரி வரையில் தங்கள் பொருள்களை உலகமறியச் செய்ய பலவித (Trade Mark டிரேட் மார்க்) வியாபாரக்குறி என்னும் சித்திர உருவம் ஒவ்வொன்றிலும் அமைத்து அதன் மூலமாக தங்கள் வியாபாரத்தை விர்த்தியடையச்செய்யும் ஓர் சிறந்த வழியும் சித்திர வித்தையின் உதவியில்லாமல் ஆகின்றதா? சற்றே நன்றாகக் கவனித்துப்பார்.

மு:— என்ன சுந்தரம்? வியாபாரத்திற்கு வியாபாரக்குறி மிகவும் முக்கியமா? வியாபாரக்குறியில்லாவிட்டால் வியாபாரம் நடைபெறாதா என்ன?

சு:— வியாபாரமென்பது இன்னதென்று நீ சரியாகத் தெரிந்துகொண்டிருந்தால் இக்கேள்வியைக் கேட்டிருக்கமாட்டாய் ஏனென்றால் சில சாமான்களைக் கண்ணால பார்த்தவுடனே நல்லது அல்லது கெட்டது என்று ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். சிலவகை சாமான்களை உபயோகித்தால்தான் தெரியவரும். இன்னும் சிலவகை சாமான்கள் எவ்வளவு நாளைக்கு நீடித்து நல்ல நிலைமையிலிருந்து வருகின்றதென்பது அநுபவத்திலேதான் தெரிந்துகொள்ளமுடியும். ஆகையினால் நல்ல சாமான்களை தயார் செய்பவர்கள் அவசியம் வியாபாரக்குறியை அதில் அமைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் எழுத்துகளைப் படித்தறியும் ஜனங்களைத்தவிர, மற்ற படிக்காத மக்கள் பலரும் வியாபாரக்குறி என்னும் ஓர்வித அடையாளத்தைக் கொண்டு அதனை வாங்க பிரியப்படுவார்கள். அதனால் வியாபாரம் விர்த்தியடைந்து நல்ல லாபம் கிடைக்கும்.

மூ:— ஏன் சுந்திரம்! மிக்க நல்ல சாமான்களைச் செய்கிற வர்கள் இது மிக நல்ல சாமான்களென்று அதன்பேரில் எழுதி விட்டால் போதாதா? இதனால் வியாபாரம் சிறப்பாக நடை பெறுதா? வியாபாரக்குறி சித்திர உருவமாகத்தானிருக்கவேண்டு மென்பது என்ன அவசியம்?

சு:— நீ சற்று முன் கூறியபடி நல்ல சாமான்கள் என்று எழுதுவதும் ஓர்வகை சித்திரத்தைச் சேர்ந்ததாகவிருந்தாலும் ஏதோ ஓர் பாஷையில்தானே எழுதமுடியும் பல பாஷைகள் வழங்கும் பல நாடுகளுக்குச் சென்று பயனளிக்குமா? தவிர மான்மார்க், புலிமார்க், என்ற இதுபோன்ற பல உருவங்களில் ஏதாவது ஒன்றை வியாபாரக்குறியாக ஏற்படுத்திக்கொண்டால் வியாபாரக்குறி சட்டதிட்டப்படி இதனை வேறு யாரும் உபயோ கிக்கமுடியாது. தவிரவும் பல பாஷைகள் வளங்கும் பல நாட்டினரும் படிப்பே இல்லாத பல மக்களும் அனுபவத்திற்கு வந்து நல்லதென்று கண்ட அந்த அடையாளமுள்ள சாமான் களையே வாங்குவார்கள். இதைத்தவிர நல்ல சாமான்கள் என்று எழுத்தால் எழுதிவிட்டால் பல வியாபாரிகளும் அவ்வார்த்தை யை தாராளமாக உபயோகிக்கலாம். இவ்வார்த்தையை பலரும் உபயோகிக்கக்கூடாதென்ற சட்டதிட்டமில்லை. இவையல்லாமல் அப்பாஷை தெரியாத பலரும் படிப்பேயில்லாத பல மக்களும் இன்னதென்று கொஞ்சங்கூட அறியக்கூடாமல் போய்விடும். ஆகையினால்தான் வியபாரத்தில் தலை சிறந்து விளங்கும் பல அன்னிய நாட்டார்கள் வியாபாரக்குறியை மிக்க அவசியமாக உபயோகிக்கிறார்கள். இவைகளுக்காக பல பெருத்த வியாபாரி கள் கண்களை மயக்கும் பலவித வர்ண சித்திரங்களை மிக்க பொருள்ச்செலவின்பேரில் தங்கள் பொருள்களின்மீது ஒட்டி உப யோகிக்கிறார்கள். அவைகளெல்லாம் வீணானது என்று சிலர் எண்ணுவது வியாபார ரகசியம் தெரியாத தன்மையேயாகும்.

மூ:— ஆமாம் சுந்தரம். சாதாரணமாக நாம் தினகாலம் உபயோகிக்கும் நெருப்புப்பெட்டியை எடுத்துக்கொண்டபோதி லும் அதில் ஒவ்வொன்றிலும் அடையாளக்குறி இருக்கின்றது.

மேலும் எத்தனையோவிதமான அடையாளக்குறியையுடைய பல வித நெருப்புப்பெட்டிகளை நம் கடைகளில் பார்க்கிறோம். நான் அவைகளை முதலில் பார்த்த[illegible]ஏன நெருப்புப்பெட்டிக்கும் இவ்வளவு அழகு வேண்டுமா? என்[illegible]ந்தேன். ஆனால் ஒருநாள் ஓர் கிராமத்துப்பெண் கடையில் நெருப்புப் பெட்டி ஒரு டெஸன் வாங்கவந்தவள் நட்சத்திரமார்க் நெருப்புப் பெட்டி ஒரு டெஸன் கொடுங்களய்யாவென்று கடைக்காரனைக் கேட்டாள். அதற்கு கடைக்காரன் அதைவிட நல்ல பெட்டியிது இதைக் கொண்டுபோவென்று கப்பல்மார்க் பெட்டியைக் கொடுத்தான். அதற்கு அவள் எனக்கு வேறொன்றும் வேண் டாம் நட்சத்திர மார்க் பெட்டிதான் வேண்டுமென்று கொடுத் ததை வாங்க மறுத்தாள். அருகில் நின்ற நான் அக்கப்பல்மார்க் பெ[illegible]யைப்பார்த்து (Best Matches) நல்ல தீக்குச்சிகள் என்று இங்கிலீஷில் எழுதியிருப்பதைப் படித்துப்பார்த்து இது நிரம்ப நல்லபெட்டி அம்மணி! இதைக்கொண்டுபோவென்று வலுவில் நான் சொன்னேன். அதற்குப் படிக்கத்தெரியாத அப்பெண் உங்களுக்கு என்ன ஐயா தெரியும்? மூன்றொரு தடவை கப்பல் மார்க் தீப்பெட்டிகளை வாங்கிக்கொண்டுபோய் கிழிக்கையில் கிழித்தவுடனே குச்சிகள் இரண்டாக ஒடிந்து போய்விட்டன. அதனால் அது அவ்வளவு நல்லதல்லவென்று எனக்கு புத்திசொல்ல ஆரம்பித்துவிட்டாள். இதனால் நீ சொன்னதுபோல படிப்பில்லாத மக்களும் தெரிந்துகொள்ளும் படியாக வியாபாரக்குறி என்னும் சித்திர உருவம் வியாபாரத்தை விர்த்திசெய்ய நல்லதோர் வழியாகவிருக்கின்றதென்பது நான் கண்ணாரக்கண்டவுண்மை. மெய்தான் சுந்தரம்! சித்திர வித்தை யின் உதவியால் வியாபாரப் பெருக்கத்திற்கு நல்ல வழியிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை.

சு:— முத்து! இதுதான் உன்னைப்பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சியைக்கொடுக்கின்றது ஏனெனில் உண்மையையும் அநு பவத்தில் கண்ட விஷயங்களையும் ஒன்றையும் மறைக்காது ஒப் புக்கொள்ளும் பெருந்தன்மையே மிக்க சிறந்ததாகும். ஏனென்

னால் சிலர், விஷயம் ஒன்றும் தெரியாவிட்டாலும் தெரிந்தவர் போல் பாவிக்கிறதுமல்லாமல் உண்மைகளைத் தெரிந்துகொள்ள மனமில்லாது வீண்வாதம் செய்து அர்த்தமில்லாமலே பேசி காலத்தைப் பாழ்படுத்துவார்கள் அன்னவர்களிடம் பேசுவ தால எவ்வளவு அதிருப்தியைக் கொடுக்கும் தெரியுமா? நல்லது மூத்து நாழிகையாகிறது நான் சென்றுவரட்டுமா?

மு:— என்ன சுந்தரம்! ஓர் முக்கிய விஷயத்தைப்பற்றி ஒன்றுஞ்சொல்லாமலே பேச்சை நிறுத்தப்பார்க்கின்றாய்.

சு:— அதென்ன முத்து முக்கிய விஷயம்?

மு:— நாம் இத்தனை நேரம் பேசினதெல்லாம் உலக சம்பந்தமான விஷயம். இதனைவிட எத்தனையோ மடங்கு உயர் வானதும் அவசியமானதுமான, கடவுளின் வல்லமையைப் பற்றி யும் மற்றும் பரலோக சாதனங்களைப்பற்றியும் அப்புஸ்தகத்தில் சொல்லியிருப்பதாக முன் சொல்லியவைகளை மறந்துவிட்டாயா என்ன? அல்லது சொல்லக்கூடாதென்ற எண்ணமா?

சு:— இல்லை முத்து அவ்வண்ணம் எனக்குமில்லை உன க்குமில்லை, ஆனால் நீ ஆதிமுதல் எல்லா விஷயங்களையும் மன தில் வைத்து, முக்கிய விஷயங்களை மறவாமல் தெரிந்துகொள்ள உனக்கு ஊக்கமுண்டா இல்லையா என்பதைச் சோதிக்க முயன் றேனே தவிர வேறல்ல. நீ இப்போது கேட்ட கேள்வி எனது சந்தேகத்தை நீக்கிவிட்டது.

மு:— ஆனால் நீ இத்தனை நாளாக என்னுடன் நெருங்கிப் பழகியும் என்னிடம் கொஞ்சம் சந்தேகம் வைத்துக்கொண்டிருப் பதை உனது வார்த்தைகள் தெளிவுபடுத்திவிடவில்லையா?

சு:— இல்லை. நீ அவ்வாறு நினைப்பது சரியல்ல. ஏனெ னில் அரிய பெரிய ஆராய்ச்சி விஷயங்களில் உனக்கு மனப் பூர்வமான ஊக்கம் உண்டா இல்லையா என்பதை தவிர மற்ற விஷயங்களிலல்ல. ஆகையினால் நமது அருமைக்காலத்தை

இவ்விதவாதத்தில் செலவழிக்காது விஷயத்தை மேலே சொல்லலாமென்று நினைக்கின்றேன்.

மு — ஆமாம் சுந்தரம் நான் இவ்வாறு வெளிப்படையாகக் கேட்டதற்காக என்மீது கோபித்து விஷயத்தை ஒழிக்காது தெளிவுபடச்சொல்ல மனப்பூர்வமாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

சு:— நிரம்ப சந்தோஷம். அவ்விதமே சொல்லுகிறேன் கேள் ("A Room with out pictures is like a House without windows") "வெளிச்சமில்லாத வீடும் சித்திரப் படங்கள் இல்லாத அறையும் சமம்" என்பதற்கிணங்க ஒரு வீட்டிற்கு வெளிச்சம் எவ்வளவு அவசியமோ அவ்வாறே ஓர் அறைக்கு சித்திரப் படங்களும் அவசியம். ஏனெனில் ஒருவர் அறைக்குள் அல்லது வீட்டிற்குள் நாம் நுழைந்தால் அங்கிருக்கும் படங்களின் காட்சியால் அவர்கள் இன்ன மதத்தை சேர்ந்தவர்களென்றும் இன்ன மகான்களின் அல்லது இன்ன அடியார்களின் அல்லது இன்ன தேச பக்தர்களின் கொள்கையை பின்பற்றுபவர்களென்றும் சுலபத்தில் அறிந்துகொள்ளலாம்

மு:— இதென்ன புதுமை! அஃது எப்படி சுந்தரம்?

சு:— இந்து மதத்தினர்கள் தங்கள் வீட்டில் கிருஸ்தவ மத ஆச்சாரியர்களாகிய இயேசுகிருஸ்து முதலானவர்களின் படங்களை வைக்க விரும்பார்கள். இந்து மதத்திலும் சைவர்களில் சிலர், விஷ்ணுவின் படமோ, அல்லது விஷ்ணு மத ஆச்சாரியார்களின் படங்களையோ வைக்க விரும்பார்கள். அம்மாதிரியே மகமதியரும் தங்கள் மதக்குரு, மத ஆச்சாரியார்களின் படங்களைத்தவிர வேறு படங்களை வைக்க விரும்பார்கள் இவை நிற்க, பொதுவாக சன்மார்க்கத்தில் ஈடுபட்டவர்கள் சன்மார்க்கத்தை விளக்கும் பெரியோர்கள், தபோதனர்கள், பக்தர்கள் முதலியோர்களின் படங்களையும் உலக மயக்கத்திலீடுபட்டவர்கள் பலவித வேடிக்கைப் படங்களையும், ஆடல் பாடல் சித்திரப்படங்களையும் தங்கள் அறையில் வைத்திருப்பதைக்காணலாம்,

மு:— இதுதான் கடவுளைக்கண்டறியும் பரலோக சாதனமோ? நான் சில வீடுகளில் எல்லாப்படங்களையும் வைத்திருக்கப் பார்த்திருக்கின்றேனே. அவர்களை எந்த வகுப்பில் சேர்ப்பது?

சு:— நல்ல கேள்வி கேட்டாய். படக் கடைகளில் தங்கள் வியாபாரத்திற்காக எல்லாப் படங்களையும் வைத்திருப்பதுபோல தங்கள் பணப்பெருக்கால் சிலர் பெரிய பங்களா அல்லது வீடுகளைக்கட்டி அதனை அலங்கரிக்க செய்திருக்கும் செல்வவான்களின் வீட்டை நீ உதாரணமாக எடுத்துக்கொண்டாயா என்ன? அதல்ல இங்கு கூறிய கருத்து. இவையன்றி நீ சொல்லியதுபோல எல்லாப் படங்களையும் வைத்திருக்கும் தனவான்களின் வீடுகள் ஒரு ஊரில் எத்தனை? நான் சொன்ன கருத்துடனே விளங்கும் சாமான்னிய குடிகளின் தொகை எத்தனை? தவிர ஓர் விஷயத்தை எடுத்து ஆராய்ச்சி செய்யும்பொழுதோ அல்லது ஓர் தேசத்தையெடுத்துப் பேசும்பொழுதோ அங்குள்ள பெரும்பான்மையோரின் நிலைமையைக் கவனிப்பதே சிறந்தது. ஏனெனில் ஒரு ஊரில் ஒருவர் மாடிவீடு கட்டிவிட்டு மற்றவர்கள் கூரைவீட்டிலும் குடிசையிலும் குடியிருந்தால் அவ்வூரை நீ முன்சொன்ன கருத்துடனே குபேரன் பட்டணமென்று கூறிவிடுவாய் போலிருக்கிறதே.

மு:— இல்லை சுந்தரம் அவ்வாறு சொல்லுவது கொஞ்சமும் பொருந்தாததுதான். ஆனால் எப்படியாவது ஒரு கேள்வியில் உன்னை மடக்கிவிடலாமென்றுபார்த்தால் மடக்கப்பார்ப்பவரை மடக்கிவிடுகின்றதே உன் கேள்விகள். இதுவல்லவோ பெருத்த ஆச்சரியம். சரி அதற்குமேல் தயவுசெய்து சொல்.

சு:— எனதருமை நண்ப! இப்போது நான் சொல்லப் போவது சாதாரண உலக விஷயமல்லாது மோட்சமென்னும் பேரின்ப விஷயத்தின் ஓர் குறிப்பானதால் இதற்கும் சித்திரத்திற்குமுள்ள சம்பந்தத்தை ஊன்றிப்பார்ப்பதே நமது கடமை.

மு:— சுந்தரம் அவ்விதமே செய்கின்றேன்.

சீ:— ஒரே மனிதனுடைய வாழ்க்கையை கவனித்த
போதிலும் அவனுடைய வயதிற்கும், பழக்க வழக்கத்திற்கும்,
கல்விக்கும், ஆராச்சிக்கும் தக்கபடி அவனுடைய ஆயுள்காலத்
திற்குள் எத்தனையோ மாறுதல்கள் உண்டாகலாம் உதாரணமாக
ஓர் சிறுவன் அவனுடைய இளமைப் பருவத்தில் பெரும்பா
லும் விளையாட்டுப்பொருள்களின்மேலே இச்சைகொள்ளுவான்.
அல்லது தனக்கு அவசியமாகவேண்டிய பொருள்களின் மீதே
தனது கவனத்தைச் செலுத்துவான். அக்காலத்தில் சுவாமி
விவேகானந்தர் படத்தையோ அல்லது மற்ற துறவிகளின்
படத்தையோ கவனிக்கமனமிராது. இப்பேர்ப்பட்ட மகான்
களின் படங்களை விலைகொடுத்து வாங்கவுமாட்டான். அதனரு
மையும் பெருமையும் அச்சமயம் அவனுக்குத்தெரியாது
ஆனால் கைக்கெடியாரப்படத்தையோ நூதன சைக்கிள் என்
னும் (Cycle) துவிச்சக்கரவண்டியின் படத்தையோ அவன்
பார்த்துவிட்டால் அதன்பேரில் அவனது முழுகவனத்தையும்
செலுத்துவான். அவனுக்கு அப்படம் கிடைத்துவிட்டால்
மிக்கபத்திரமாக தனது புத்தகத்திலே வைத்திருந்து பலதரம்
பார்த்துப் பார்த்து சந்தோஷப்படுவான். அதேபையன் கொஞ்
சம் வயது முதிர்ந்ததும் முன் ஆவல்கொண்டதை தள்ளிவிட்டு
தனது மனதிற்குத்தக்கபடியும் பழக்கவழக்கத்திற்குத் தக்கபடி
யும் பலவித தெய்வப் படங்களையும் வேறு படங்களையும் வாங்கப்
பிரியப்படுவான். அதே மனிதனுடைய வயது முதிர்ந்து உலக
அனுபவமும் ஆராய்ச்சியும் மேலிட்டதும தன்னைப்பற்றியும்
தன்னையும் இவ்வுலகத்தையும் தோற்றுவித்த கடவுளுடைய
அபார வல்லமையின் ரகசியங்களைப்பற்றியும் நாம் எதற்காக
இப்பூமியில் பிறந்தோம் என்பதைப்பற்றியும் மற்ற உயர்ந்த
ஞானத்தைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்வான். ஏனெனில் அலை
கடல் துரும்புபோல் சதா உழன்றுகொண்டிருக்கும் இவ்வுலக
வாழ்க்கையை வெறுத்தவனாய் சன்மார்க்கமும் ஞானமும் அடைய
வேண்டுமென்கிற எண்ணமுடையவனாய் அவ்வழியை அடைந்த
பெரியோர்கள், மகான்கள், அடியார்கள் முதலியவர்களின் திரு

உருவங்களை சதா தெரிசிக்க பிரியப்படுவான் ஆகையினால் இவ்விதம் உயரிய ஞானம்... ... ...

மு:— என்ன சுந்தரம்? இத்தனை நாழிகை சொன்னவைகளெல்லாம் மிக்க தெளிவாகப்புரிந்தது. ஆனால் இப்போது என்னமோ அடியார்கள், பக்தர்கள், ஞானமென்று சோமபேறி வார்த்தைகளைப் பேசுகின்றாயே இதுதானா பரலோக சாதனம், ஏதப்பா! மூளை கலங்கிவிடும்போலிருக்கிறதே.

சு:— உண்மைதான் முத்து! மூளைகலங்கக்கூடிய அளவு மெய்ஞ்ஞானமென்பது அவ்வளவு பெரிய விஷயந்தான் கல்வியில் மகாவல்லவர்கள் என்று சொல்லப்படும் பெரிய புலவர்களெல்லாம் கடவுளின் அபார வல்லமையைப்பற்றி கண்டறிந்து பேசச் சக்தியில்லாது மூளைகலங்கி மூலையில் கிடக்கும்பொழுது நம்போன்ற சிறுவர்கள் அதிலும் இச்சிறு பக்கங்களுக்குள்ளே எவ்வாறு சர்வ வல்லமையுள்ள கடவுளின் வல்லமையை அளந்துவிடமுடியும். ஆயினும் நூலளவேயாகுமாம் நுண்ணறிவு” “கல்வியே கடவுளைக்காட்டும்” என்கிற ஆன்றோர் வார்த்தைகளுக்கிணங்க நம் சக்திக்கு இயன்றளவு, கடவுளின் அற்புத சக்திகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்து நமது அறிவை விர்த்திசெய்ய, நமக்கு கிடைக்கும் ஓய்வு காலத்தை இவ்வித நல்வழியில் செலவிடுவதினால் நமக்கு நன்மை உண்டாகாமல் போகுமா என்ன?

மு:— ஆமாம் சுந்தரம். எனக்குத் தெரிந்தவரையிலும் நான் படித்தறிந்த பல புத்தகங்களிலுங்கூட பெரிய மகான்கள் பக்தர்கள், அடியார்கள், என்று இப்போது போற்றப்படும் புண்ணியவான்களெல்லாம் எவரும் திடீரென்று மகானாகவோ, ஞானியாகவோ, குதித்துவிடவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால் உன்னுடைய அபிப்பிராயமென்ன?

சு:— உண்மைதான் முத்து! நீ சொன்னது முற்றிலும் சரியே ஆனால் நீ யாராருடைய ஜீவிய சரிதம் படித்திருக்கின்றாய்?

மு:— பட்டினத்தார், சுவாமி விவேகானந்தர், தாயுமான வர், கம்பன், காளிதாசன், ஔவை, அருணகிரியார் முதலான பல பெரியோர்களுடைய ஜீவிய சரிதம் படித்திருக்கிறேன். ஆனால் நான் எல்லாவற்றையும் ஒருதரம் படித்திருக்கிறேனே தவிர பலதரமல்ல. ஏனென்றால் அதில் ஏதாவது கேள்வியைக் கேட்டு என்னை நீ மடக்கிவிடுவாயோவென்று பயமாக விருக்கின்றது.

ச:— முத்து! எனக்கு உண்மையான ஞானம் ஒரு சிறிதுமில்லாமல் பிறரை மிரட்டி பயமுறுத்திவிடுவதினால் வரும் லாபமென்ன? ஏதேனும் உண்மை அறிவு உண்டாகிவிடுமா? ஆதலால் முத்து இப்போது நீ சொன்ன கம்பன், காளிதாசன், ஔவை, முதலானவர்களைப்போலவோ அல்லது ஞானமார்க்கத்தி லீடுபட்ட பட்டினத்தார், தாயுமானவர் முதலியவர்களைப்போலவோ, நீ ஆகவேண்டுமென்று பிரியப்பட்டால் நீ எப்போதும் என்ன செய்வாய்?

மு:— சதா அந்த நூல்களைப் படிப்பதோடு அந்நூலின் கருத்துப்படியேயும் நடந்து வருவேன்.

ச:— உண்மையாகச் சொல் எப்போதும் இடைவிடாது படிக்க முடியுமா? அதிலும் நம்போன்ற சிறுவர்களாலும், உலவாழ்கையி லீடுபட்டவர்களாலும், சதா படிக்கக்கூடியதா?

மு:— என்ன சுந்தரம், சதாவென்றால் ஓயாது, இடைவிடாமல் எப்போதுமென்று அர்த்தம் செய்துகொண்டாயா? அப்படியானால் யாரால் தான் முடியும்?

ச:— ஏன் முடியாது?

மு:— மற்ற உலக விஷயங்களைக் கொஞ்சமாவது கவனிக்காது எப்படித்தான் முடியும். அவ்வித பக்குவம் வரும் வரையிலாவது உலகத்தாரோடு உடன்பழகித்தானே ஆகவேண்டும்.

சு:— ஆமாம் முத்து உண்மைதான். ஆகையினால்தான் கம்பருடையவோ, காளிதாசனுடையவோ, ஔவையினுடையவோ, மற்ற ஞானிகளுடையவோ திருவுருவப்படங்களை நாம் நம் அறையில் வைத்திருப்போமானால் நம் கண்கள் அதனைப் பார்க்கும்போதெல்லாம் அவ்வித உயரிய எண்ணமே நமக்குள் குடிகொள்ளும். ஆகையினால் இவ்வித திருவுருவங்களை அமைக்கும் சித்திரத்திற்கும் இவ்விதச் சித்திரவுருவங்களினால் உண்டாகும் நல்லெண்ணம் ஞான முதலியவைகளுக்கும் சம்பந்தமுண்டாயில்லையா? இன்னும் சொல்லுகிறேன் கேள். இவ்வித ஞானம்பெறவேண்டுமென்கிற ஒருவன் அவனுடைய அறையில் பல நாட்டியப்பெண்களின் உருவங்களை எதிரில் தொங்கவிட்டிருப்பானேயாகில் அவனுடைய எண்ணம் எப்படி ஞானமார்க்கத்தில் செல்லும்.

மு:— உண்மைதான் சுந்தரம். பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடி மனம் குரங்கின் தன்மையாதலால் அக்குரங்கு மனத்தை அடக்கி நல்வழிப்படுத்த நல்ல ஞானவான்களுடையவும், துறவிகளுடையவும், திருவுருவப்படங்கள் சதா நம் கண்களில் தென்படவேண்டியது மிகவும் முக்கியந்தான். ஆனால் உன்னிடம் கம்பர், ஔவை, முதலிய பெரியோர்களின் திருவுருவப்படங்கள் ஏதேனுமுண்டா?

சு:— முத்து! இக்கேள்வி என்னை துயரத்தில் ஆழ்த்து இன்றது. ஏனென்னில் நம் நாட்டில் இப்பேர்ப்பட்ட பெரியோர்களின் திருவுருவத்தை அப்படியே அவருடைய உண்மையான சாயலைப்போலவே அமைத்துவைக்க நம் நாட்டினர்கள் கவனம் செலுத்தவில்லை. ஏனெனில் இவ்வித உயரிய நோக்கங்களுக்கு அவசியமான சித்திர வித்தையைப்பற்றி தக்க கவனம் செலுத்தாத குறைவேயாகும். ஆயினும் ஏதோ ஒருவாறாக இப்போது வேண்டுமானால் செய்துகொள்ளலாம்.

மு:— அதில் என்ன பிரயோஜனம் சுந்தரம். அவருடைய உண்மைத் தோற்றமில்லாத படங்களால் அவ்வளவு

விசேஷம் ஏற்படாது. ஏனெனில் அவர்களெழுதிய நூல்களில் எவ்வளவு பக்தி, சிரத்தை, அன்பு நமக்கு அமைந்திருக்கிறதோ அதைவிட பதினுயிர மடங்கு அவர்களுடைய திருவுருவங்களைப் பார்க்க மனம் ஆசைகொள்ளுகின்றது.

ச:— இதற்காகத்தான் முத்து சித்திரமும் சிறுவர்களு மென்ற நூலில் சித்திரத்தைப்பற்றி அவ்வளவு விரிவாக எழுதி யிருக்கிறது. தவிரவும் ஆதியந்தமில்லாமல் சுயம்புவாயிருக்கிற பராபர வஸ்துவே கடவுள் என்று நாம் நூலாதாரம் என்னும் பழைய புத்தகத்தில் படித்திருக்கிறோமே அது ஞாபகமிருக் கிறதா? அந்தப் புத்தகந்தான் நாம் இவ்வளவு தூரம் விரிவாக ஆராய்ச்சிசெய்ய மூலாதாரம். அப்பேர்ப்பட்ட மூலாதாரத் திற்கு முதல்வனுகயிருக்கப்பட்ட யாதொரு கடவுளை நாம் வணங்கவேண்டுமென்றுல் ஏதாகிலும் ஒரு உருவமூலமாகத் தானே வணங்கி நல்வழிப்பெறவேண்டும். ஆகையினுல் இன்ன உருவமுள்ள கடவுள் என்று சொல்லமுடியாத அச் செகதீசனை வணங்குவதற்கு உற்றதுணையாகவிருப்பது சித்திரமல்லவா? அச் சித்திரவித்தையின் அருமை பெருமைகளைப்பற்றி மிகவும் விரிவாக "சித்திரமும் சிறுவர்களும்" என்னும் நூலில் எழுதி யிருப்பதால் எனது ஓய்வு காலத்தை அதனேடு செலவழித்து அதனைப்படித்து முடிக்கும் வரையில் உன்னை நான் பார்க்க முடியவில்லை. எனது பிரிய நண்ப! இதுதான் என்னை நீ நான்கு நாட்களாக பார்க்கமுடியாததற்குக் காரணம். [நான் சொல்லி யவைகள் யாவும் விளங்கினதா? இப்போது உனது அபிப்பிராய மென்ன?

மு:— எனது ஆருயிர்துணையே! நான் முதலில் சித்திர மும் சிறுவர்களும் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில், கொண்ட கருத்து கொஞ்சமும் சரியல்ல என்கிற முடிவுக்கு வெகுநேரத்திற்குமுன்னதாகவே வந்துவிட்டேன். ஆயினும் இவ்வளவு அருமையான விஷயங்களை மிக்க தெளிவாகச்சொல் லும் அப்புத்தகத்திற்கு வேறு நல்ல பெயர்கள் வைத்திருக்கக் கூடாதா? அல்லது வைத்தால் பொருந்தாதா?

சு:— எனதன்பிற்குறிய நண்ப! பெயர் அழகு மாத்திரம் இருந்தால் போதுமா? அஷ்ட தரித்திரப்பெண்ணுக்கு தன லெக்ஷிமி என்று பெயர் அமைத்துவிடுவதினுல் என்ன நன்மை ஏற்படும்? இக்காலத்தில் பெயர் அழகைப்பார்த்துப் பணத்தைக் கொடுத்துப் பல புத்தகங்கள் வாங்கி பயன் சிறிதும் பெருமல் போவது சாதாரணமாகிவிட்டது. இதுதான் நவீன நாகரீக மெனச் சொல்லும் போலி நாகரீகத்தைப்போற்றுங்காலம் தவிர வும் "சித்திரமும் சிறுவர்களும்" என்கிற வார்த்தைகளில் உயர்ந்த கருத்துகள் இல்லாமல் போகவில்லை என்றே நான் எண்ணுகின் றேன்.

மு:— அதென்னவையா உயர்ந்த கருத்து?

சு:— எல்லாம் தெரிந்தவருமில்லை யாதுமறியாதவரு மில்லை என்பதற்கிணங்க ஒருவர் ஒரு விஷயத்தில் எவ்வளவு புத்திமானுகவோ, வல்லவராகவோ விளங்கினபோதிலும் அவ ருக்குத்தெரியாத மற்ற காரியங்களில் அவர் சிறுவர்களுக்குச் சமானமானவரே. அதாவது ஒன்றும் தெரியாதவர்களுக்குச் சமானமானவரே. உதாரணமாக ஓர் ரோகத்தை நிவர்த்திக்கும் பண்டிதன் ஓர் புகைவண்டியை ஓட்டுவானு? ஓர் கப்பலைச் செலுத்தும் ஓர் மாலுமி ஓர் வீணையை வாசிப்பானு? ஓர் வீணையை வாசிக்கும் ஓர் வித்துவான் ஓர் சிறு பானையைச் செய்வானு? ஆகையால் பானை செய்பவனிடம் வீணை வாசிக்கும் வித்துவானும், புகைவண்டியை ஓட்டும் ஓர் தொழிலாளியும் வியாதியைப்போக்கும் ஓர் பண்டிதனும் ஒன்றும் தெரியாத சிறுவர்களைப்போலவே அங்கு அவர்களும் நின்று வேடிக்கை பார்ப்பார்களே தவிர வேறேதேனும் செய்யமுடியுமா? இது உலகமறிந்த உண்மையல்லவா?

மு:— ஆமாம் சுந்தரம். உண்மைதான் ஒருநாள் நான் ரயில்பிரயாணம் செய்யுங்காலத்தில் ஓர் (ஜங்ஷனில்) புகைவண்டி சந்திக்குமிடத்தில் ஓர் (டிரைவர்) வண்டியை ஓட்டுபவர் வராதா மதம் ஏற்பட்டதனுல் வண்டித்தொடர் தாமதமாக புறப்பட

நேர்ந்தது. அப்போது அங்கிருந்த பலரும் ஜில்லா கலக்டரும் கூட, என்னைப்போலவே என்பக்கமாக நின்று வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தாரே தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. அந்த இடத்தில் நானும் அவரும் சிறுவர்களாகத்தான் தோன்றினோம். சற்று நாழிகைக்கெல்லாம் வண்டியை ஓட்டுபவர் வரவே வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்த அத்தனைபேர்களையும் "ஓ" வென்று கூவி "வா" என்று அழைத்து அனைவரையும் வண்டியிலேற்றி இழுத்துக்கொண்டு ஓடும்படி செய்துவிட்டார். ஓகோ இப்போதுதான் தெரிந்தது இக்கருத்தைக்கொண்டுதான் அப்புத்தகத்திற்கு "சித்திரமும் சிறுவர்களும்" என்று பெயர் அமைக்கப்பெற்றிருக்கிறதுபோலிருக்கிறது. பேஷ்! பேஷ்!!

சு:— முத்து! இதுமாத்திரமல்ல இன்னமொன்றும் உண்டு.

மு:— அதென்ன சுந்தரம்? அதனை நீ சொல்லியே தீர வேண்டும்.

சு:— இன்று சிறுவர்களாகவும் விளையாட்டுப்பிள்ளைகளாகவுமிருந்து நாளை குடும்பத்தலைவர்களாகவும் பலஉத்தியோகஸ்தர்களாகவும் பல சபையின் அங்கத்தினர்களாகவும் சபைத்தலைவர்களாகவும், தேசத்தலைவர்களாகவும் வரவிருக்கும் சிறுவர்களின் மனதில் இவ்விஷயங்களை நன்கு பதியவைக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயும் அப்புத்தகத்திற்கு "சித்திரமும் சிறுவர்களும்" என பெயர் இடப்பெற்றிருக்கிறது.

மு:— ஏன் சுந்தரம் பள்ளிக்கூடங்களில்தான் இச்சித்திர வித்தையைப்பற்றி செவ்வையாகப்போதிக்கிறார்களே.

சு:— இல்லவே இல்லை. சரியான முறைப்படி போதிப்பதுமில்லை. அதனை கற்கவும் கட்டாயப்படுத்துவதுமில்லை. பிள்ளைகளும் அவைகளை கவனமாய் தெரிந்துகொள்ளுவதுமில்லை. அறிந்துகொண்டவர்களுக்கும் அருமையாக போதிப்பவர்களுக்கும் தக்க ஆதரவுமில்லை. எல்லாம் நிரம்ப சீர்திருத்த

டையவேண்டும். சாதாரணமாக தற்கால நிலைமையில் நம் நாட்டின் அவசியத்திற்கும், முன்னேற்றத்திற்கும் உதவாத பல பாடங்களைப் போதிப்பதாகவிருந்தாலும், அவர்கள் படிக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் சித்திரம் அவசியந்தான். உதாரணமாக:— பூகோளம், தேச சரித்திரம், அறிவுநூல் சாஸ்திரம், தேகதத்துவ சாஸ்திரம், தேகக்கூறு சாஸ்திரம், இயற்கைப் பொருட்பாடம் முதலிய எல்லாவற்றிற்கும் சித்திரப் பழக்கம் மிக்க அவசியமாகயிருந்தாலும் சித்திரப்பழக்கம் அவசிய பாடமாக ஏற்படுத்தவில்லை. இது ஓர் பெருங்குறை. அவசிய பாடமாக அறிவிற் பெரியோர்களால் ஏற்படுத்தாவிடில் அறிவிற் சிறியோர்கள் எப்படி அதன் அவசியத்தை உணர்வார்கள்.

மு:— உண்மைதான் சுந்தரம். அறிவிலும் உலக அநுபவத்திலும் பெரியோர்களைக்கொண்டு நடத்தும் அரசாங்கத்தார் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்தான்.

சு:— அதுமாத்திரமல்ல முத்து. நம்தேசமக்கள் பெரும்பான்மையோர்களே இவ்வித விஷயங்களை கவனிப்பதில்லை. கல்வி என்றால் என்ன? நாட்டிற்கு வேண்டிய தொழில் கல்விகள் இருக்கின்றதா? அதற்காக நாம் கவனம் செலுத்தவேண்டாமா என்கிற எண்ணமே நம்தேச படித்தவகுப்பார்களுக்கில்லாமல் எல்லோரும் பெரிய படிப்பு படிப்பதும் பி ஏ. (B. A.) எம். ஏ. (M. A.) பட்டம் பெறுவதும் உத்தியோகத்திற்காக உறங்கிவிழுகின்றவர்களாக இருக்கின்றார்களே தவிர தேச முன்னேற்றத்தை ஒரு சிறிதும் கவினிப்பதேயில்லை.

மு:— சுந்தரம் ரொம்ப வந்தனம். நீ குறிப்பாகச்சொன்னவைகளை யான் அறிந்துகொண்டேன். நானும் அவ்வித பெரிய படிப்புகள் படித்து முடித்தபிறகு உத்தியோக முதலியவைகளிலேயே கவனத்தை செலுத்தி தேச முன்னேற்றத்திற்கு வேண்டிய தேச ஊழியங்களை மறந்துவிடுவேன் என்கிறதற்காக நீ மறைமுகமாக என்னைத்தாக்கி சொன்னதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். ஆயினும் உண்மையில் என் நோக்கம்

அவ்வாறல்ல. பரோபகார சிந்தையுடனே பொதுஜனத் தொண்டுசெய்யவேண்டுமென்ற எண்ணமே என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. நல்லது சந்தசம் நிரம்ப நாழிகை ஆகின்றது மற்றுமென்ன விசேஷம்.

அ:— கடவுளுடைய ஆசிர்வாதத்தினால் எல்லாம் நன்மை தான். நேரம் அதிகமாகிவிட்டது சென்றுவருகின்றேன். வந்தனம்.

மு:— வந்தனம், வந்தனம். ஓர் முக்கிய விஷயம். நீ இப்போது சொல்லிவந்த "சித்திரமும் [illegible]களும்" என்கிற புத்தகமொன்று எனக்கு கட்ட[illegible] வேண்டும் [illegible] இருக்கட்டும். மறந்துபோகக்கூடாது வந்தனம்.


---

# நீதிமொழிகள்.

1. சித்திரமே உலகபொது பாஷை.
2. கல்வி கரையில கற்பவர் நாள் சில.
3. போற்றுக காலம் பொருளினும் புகழினும்.
4. வெளிச்சமில்லாத வீடும் சித்திரமில்லாத அறையும் சமம்.
5. எழுதத் தெரியாத பிள்ளைகளுக்கும் வரையத் தெரியும்.
6. எழுதத் தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு பிள்ளையும் வரையத் தெரிந்துகொள்ளவேண்டும்.

# PUZZLE PICTURE.

## மலைப்புப்படம்.




**Find out!
A hen and a
cat hiding in
the dry tree.**

இந்த
பட்டமரத்தில்
பதுங்கியிருக்கும்
கோழியையும்
பூனையையும்
கண்டுபிடிக்க.
கவனித்துப்பார்க்க!

*The following books by the same author are in the press and will be published soon.*

## 1. Sundaram's Settled Hand writing.

It will be very useful to the boys and girls, in any walk of life, who wish to have a good settled hand writing.

## 2. Sundaram's Black Board Drawings.

For the use of pupil teachers in training Schools and Colleges and also for Students in other schools.

Drawing should form a part of the education of every workman, and no education is complete without it.




Though Drawing should be learned in youth, it may form a pleasent and useful study at any period of life.